பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 31 | புதன்கிழமை | (17.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 272

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## மணற்காடு-குடத்தனையில் மண் ஏற்றத் தடையில்லை

(யாழ்ப்பாணம்)

மணற்காடு, குடத்தனைப் பகுதியிலிருந்து மண் விற்பனை செய்வதற்கு வடமராட்சி கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தி நிறுவனத்திற்கு பொறுப்பான அதிகாரி அனுமதி வழங்கியுள்ளார்.

இப் பகுதியிலிருந்து மண்ணை எவ்வித கட்டுப்பாடுமின்றி பெற்றுக் கொள்ள முடியுமெனவும், அதனை ஏற்றிச் செல்வதற்கான வழி அனுமதிப் பத்திரம் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் இயங்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் உப அலுவலகத்தில் வைதது அலுவலக நாட்களில் வழங்கப்படுமெனவும் இதற்காக எவ்வித சிபார்சோ அல்லது கடிதங்களோ தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ந.5)

## இடைக்கால நிர்வாக சபையை எதிர்த்து பிக்குகள் முன்னணி இன்று போராட்டம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபையை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படுவதை எதிர்த்து தேசிய பிககுகள் முன்னணி இன்று கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, பதுளை உட்பட 17 மாவட்டங்களில் சத்தியாககிரகப் போராட்டங்களை நடத்தவுள்ளது.

இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல பௌத்த அமைப்புக்களுக்கும் மற்றும் இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுக்கும் தேசிய பிக்குகள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, இடைக்கால நிர்வாகம் குறித்த விடயத்தில் அரசாங்கம் மாற்று நடவடிக்கையை எடுக்கவில்லையானால், இவ்வாறான சத்தியாக்கிரகப் போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் இன்று நடைபெறவுள்ள இப் போராட்டம் அரசுக்கு ஓர் எச்சரிக்கை மாத்திரமே எனவும் தேசிய பிக்குகள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன்-ரெலிவ்சன் சந்திப்பு

# குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவதற்கு புலிகள் மறுப்பு!

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு பயனுள்ளதாக அமைந்த போதும், கிண்ணியா குரங்குபாஞ்சான் முகாமை அகற்றப் போவதில்லை என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கூறிவிட்டார்கள் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்க்வே ரெலிவ்சன் சர்வதேச ஊடகமொன்றிற்குத் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பை அடுத்து யுத்த நிறுத்தக் கண்காணப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்க்வே ரெலிவ்சன் நேற்றிரவு சர்வதேச ஊடகமொன்றுக்குப் பேட்டிஅளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கிண்ணியா குரங்குபாஞ்சான் முகாமை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேரில் சென்று பார்வையிடுவதற்கு விடுதலைப் புலிகள் முன்பு அனுமதி அளிக்கவில்லை. ஆனால் நேற்றைய சந்திப்பில்

(10ம் பக்கம் பார்க்க)



நேற்றைய தினம் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சனும், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள்

## பேச்சுக்கள் நடந்த போதிலும் தமிழ் மக்களுக்கு நன்மை இல்லை!

### சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒருவருடம் பூர்த்தியான போதும், எமது மக்களுக்கு எந்த விதமான நன்மைகளும் கிடைக்கவில்லை என்பதே பொதுவான நிலைப்பாடாக உள்ளது ஏன்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனான நேற்றைய சந்திப்பை முடித்துக் கொண்டபின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மத்தியில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பையடுத்து சு.ப. தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மத்தியில் மேலும் தெரிவிக்கையில்,

அரசும் விடுதலைப் புலிகளும் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்த போதும் அப் பேச்சுக்களில் இரு தரப்பினரும்

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் இன்று கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இன்று இலங்கை வரவுள்ளார். இலங்கை வரவுள்ள விடார் ஹெல்கீசனுடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்மும் வருகிறார்.

இன்று இலங்கை வரும் விடார் ஹெல்கீசன் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நாளை கிளிநொச்சியில் வைத்து சந்தித்துப் பேசவுள்ளார்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நோக்குடனே இவரது

(10ம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த வலி.வடக்கு மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்துக!

### ஒரு லட்சம் கையொப்பத்துடன் ஐ.நாவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து பல வருடங்களாகியும் மீளக்குடியமர முடியாது அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறும் மக்களின் பிரச்சினைகளை உலகத்தின் பால் திசைதிருப்பும் பொருட்டு ஒரு இலட்சம் மக்களின் கையெழுத்துக்களைத் திரட்டி ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பும் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்த வகையில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களால் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இக் கையெழுத்துத் திரட்டும் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த ஞாயிறன்று தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில், அதன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்ற வலி.வடக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## பயிற்றுவிப்பாளர் குழு நேற்று தென்பகுதிக்குத் திரும்பியது!

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள 29-வது தேசிய விளையாட்டுவிழாவிற்கான பயிற்சிகளை வழங்குவதற்காக வருகைதந்திருந்த பயிற்றுவிப்பாளர் குழுபயிற்சிகளை இடைநிறுத்திவிட்டு தென்னிலங்கைக்குத் திரும்பியுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ். பத்திரிசியார் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பயிற்சிகளை வழங்கி வந்த மேற்படிகுழு;

தற்போதுள்ள இனப்பிரச்சினை

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிம்பாவே அணியின் முன்னாள் தலைவர் இங்கிலாந்து அணியில் இணைந்தார்

நடந்து முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகளின் பின்னர் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற சிம்பாவே அணியின் முன்னாள் கிரிக்கெற் அணித்தலைவர் அன்ரி.'.பிளவர் இங்கிலாந்தின் எக்ஸ்.எக்ஸ்.பிராந்திய அணியுடன் இரண்டுவருட கிரிக்கெற் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளார்.

சிம்பாவேயின் அதிபருக்கெதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்டமைக்காக ஜனாதிபதி முகாபேயின் பலத்த கண்டனத்திற்கு .'.பிளவர் உள்ளாகியிருந்தார் என்பதுடன் கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் சிம்பாவேயில் நடைபெறும் ஆட்சிக்கு எதிராகக் கறுப்புப் பட்டி அணிநது விளையாடியதன் மூலம் அன்ரி.'.பிளவர் தனது எதிா்ப்பை வெளிக்காட்டியிருந்தார். இதன் பின்னர் சிம்பாவேயை விட்டு வெளியேறிய இவர் இங்கிலாந்தில் குடியேறினார்.

பிரிட்டனைச் சேர்ந்த பெண் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டுள்ளதன் மூலம் பிரிட்டனில் வசிப்பதற்கான உரிமையை இவா பெற்றுக்கொண்டுள்ளார். எனினும் கடந்த 10 வருட காலமாக சிம்பாவே டெஸ்ட கிரிக்கெற் அணிசார்பாக விளையாடி வந்த அன்ரி.'.பிளவர் கடந்த 2002 ஆம் ஆண்டு விஸ்ரன் சஞ்சிகையினால் அதிசிறந்த கிரிக்கெற் வீரர் என்ற தெரிவிற்கான விருதினையும் இவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-68)

## சிம்பாவே அணி அடுத்தமாதம் ஆஸ.க்கு சுற்றுப் பயணம்

சிம்பாவே! கிரிக்கெற் அணி, அடுத்தமாதம் அவுஸ்திரேலியாவிற்கான கிரிக்கெற் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. இந்தச் சுற்றுப்பயணத்தின் போது, சிம்பாவே கிரிக்கெற அணியின் பயிற்றுநரும் அவுஸ்திரேலியருமான ஜெவ் மார்ஸ் தனது சொந்த நாட்டு அணியை எதிர்கொள்ளவுள்ளார்.

இதன் மூலம், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிகளை சிம்பாவே வீரர்கள் எவ்வாறு எதிர்கொளளப் போகின்றார்கள் என்பதை அவா நேரடியாக நோக்கவுள்ளார்.

இதேவேளை, சிம்பாவே கிரிக்கெற் அணிக்கு எதிரான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெற் போட்டியில் அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் ஜெவ் மார்ஸ் விளையாடவுள்ளார். இதன் மூலம் சிம்பாவே வீரர்கள் அவுஸ்திரேலிய வீரர்களை எவ்வாறு எதிர்கொள்வார்கள் எனபதை எதிரணி வீரராக செயற்பட்டு கணிப்பிட முடியும் என்று ஜெவ் மார்ஸ் கூறியுள்ளார்.

இந்தப் போட்டியில் விளையாட முன்னாள் அவுஸ்திரேலிய உதவித் தலைவராக செயல்பட்ட ஜெவ் மார்சின் புதல்வரான சோன் மார்ஸ் 2ஆம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெற் வீரர்களான அடம் கில்கிரிஸ்ற், ஜெஸ்ரின் லாங்கர், டேமியன் மாட்டின், பெரட் ஜோர்க் ஆகியோரும் இந்த அணிக்காகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# வெற்றி இலக்கை நோக்கி வீறுநடைபோடும் பாக்.அணி

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் லாகூர் விளையாட்டரங்கில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் பாகிஸ்தான் அணி42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது. இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித்தொடரில் பாகிஸதான் 3:0என்ற புள்ளிகள் அடிப்படையில் தொடர்ந்தும் முன்னணியில் திகழ்கின்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸதான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடிவில் 9விக்கெற்றுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யூசுப் ஜொஹானா 65 ஓட்டங்களையும், அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பங்களாதேஷ் அணிசார்பாக தபாஸ் பர்ஸா 54 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து நான்கு விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர், பங்களாதேஷ் அணி பதிலுக்கு ஆடுகையில் மின்சாரத் தடைகாரணமாக போட்டி இரண்டு தடவைகள் தடைப்பட்டு பின்னர் தொடர்ந்து நடைபெற்றது.

இதன் காரணமாக போட்டி நேரத்தில் 55 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டதற்காக பங்களாதேஷ் அணிக்கான இலக்கு 'டக்வோல்த் லூயிஸ்' முறைப்படி 44ஓவர்களில் 244ஓட்டங்கள் என மீள் நிர்ணயம் செய்யப்பட்டது.

எனினும், பங்களாதேஷ் அணியினால் 44ஓவர் முடிவில் ஒன்பது விக்கெற்றுக்களை இழந்து 201ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் கனான்ஸ் சக்கார் அலோக் கபாலி ஆகியோர் தலா 61 ஓட்டங்களைப் பெற்றனர் பந்துவீச்சில் 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெற்றுக்களை பாகிஸ்தான் அணிசார்பாக உமர்குல் கைப்பற்றியிருந்தார். இந்த போட்டியில் ஆட்ட நாயகனாகவும் உமர்குல் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான 4வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெற்போட்டி நாளை ராவல் பிண்டியில் நடைபெறவுள்ளது. (உ-68)

## நோயினால் பீடிக்கப்பட்ட நேகிரா பூரண சுகமடையவில்லை

இந்திய கிரிக்கெற் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அஸ்சிஸ் நேகிரா, சத்திர சிகிச்சையின் பின்பும் பூரண குணமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில விளையாடும் வாய்ப்பை நேகிரா இழந்திருப்பதாக இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

23வயதாகும் நேகிரா, கடந்த ஏப்பிரல் மாதம் தென்னாபிரிக்காவில்வைத்து சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து சுமார் 5மாத காலம் பூரண ஓய்வில் இருந்து வரும் அஸ்சிஸ் நேகிரா, இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்ற மருத்துவரின் அறிவிப்பால் நேகிரா விளையாட மாட்டார் என்பது உறுதிசெய்யப்பட்டுவிட்டதாக இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (உ-68)

## பெருமைக்குரியவராகிறார் ரூடிபென் வியூரன்

அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்ற உலகக்கிண்ண றகர் போட்டிகளில் நமீபிய அணிசார்பாக ரூடிபென் வியூரன் விளையாடவுள்ளார்.

இதன் மூலம் இரணடு வகையான விளையாட்டுக்களில் உலகக்கிண்ணப் போட்டிக்காக விளையாடும் நமபிய நாட்டைச்சேர்ந்த முதல் வீரர் என்ற பெருமையை டாக்டர் பட்டம்பெற்ற ரூடிபென் வியூரன் பெறவிருக்கின்றார்.

இவ்வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகளில் பென் வியூரன் நமீபிய அணி சார்பாக விளையாடி இருந்தார்.

அந்த உலகக்கிண்ண முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணியுடனான முதல் போட்டியிலேயே இங்கிலாந்து அணியின் 5விக்கெற்றுக்களை பென் வியூரன் கைப்பற்றி இருந்தார். இதன் மூலம் நமீபிய அணி சார்பாக முதன் முதலில் 5விக்கெற்றுக்களைக் கைப்பற்றியவா என்ற சாதனையையும் இவர் தன்வசப் படுத்தியிருந்தார்.

நமீபியாவிற்காக 27சர்வதேச றகர்போட்டிகளில் விளையாடியுள்ள இவர், இம்முறை நடைபெறவுள்ள உலகக்கிண்ண றகர்ப்போட்டியிலேயே முதன் முதலாக நமீபியாவிற்காக விளையாடவுள்ளார். நான்கு வருடங்களின் முன்னர் நடைபெற்ற உலகக்கிண்ண றகர்ப்போட்டியில் நமீபிய அணி சார்பாக இவர் குழுவில் இடம்பெற்றிருந்தாலும் அம்முறை போட்டிகள் எதிலும் அவர் கலந்துகொள்ளவில்லை. அணியில் பிரதி ஆட்டக்காரராக மட்டுமே இடம் பெற முடிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்



அந்த நாள் ஞாபகம்.....

இந்த நாள்.....
எமது விடிவிற்காக
தன்னையே அர்ப்பணித்து
உணவின்றி நீரின்றி
உண்ணா நோன் பிருந்த
தியாக வேங்கை ஒன்று
தனது இறுதி மூச்சை
நிறுத்திய நாள்

தே ரோடும் வீதியிலே
நீரேதும் அருந்தாமல்
திடமோடு நோன்பிருந்த
திலீபன் என்ற
தியாகச் சுடர்
அணைந்த நாள்

விடுதலைப் பறவையொன்று
சிறகொடிந்து
விழுந்த நாள்
மூத்த தமிழன்னை
முகம் நிமிர்ந்து திலகமிட
தன்னை முதற் பலியாக்கிய
பார்த்தீபன்
தனது இறுதி யாத்திரையை
தொடர்ந்த நாள்

-புதுக்கவி

## வில்லியம்ஸ் சகோதரிகளை பெல்ஜியம் பின்தள்ளியது

உலக டெனிஸ் சம்மேளனம் அதன் புதிய டெனிஸ் தரப்படுத்தல் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் பெண்கள் பிரிவில் பெல்ஜிய வீராங்கனையான கிம்கிளைஸ்டஸ் 6 ஆயிரத்து 589 புள்ளிகளைப்பெற்று தொடர்ந்தும் முதலிடத்தினைத் தக்க வைத்துள்ளார்.

அதே நாட்டைச் சேர்ந்த ஜெற்றின் கெனின் காடின் 6ஆயிரத்து 259 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினை வகிக்கின்றார்.

கடைசியாக நடைபெற்று முடிந்த அமெரிக்க பகிரங்க டெனிஸ் சுற்றுப் போட்டியின் மகளிர் இறுதி ஆட்டத்தில் இந்த ஜோடியே விளையாடி இருந்தது. எனினும் கிம்கிளைஸ்டஸ் இவ் இறுதிப் போட்டியில் ஜெற்றின் கெனின் காடினிடம் தோற்றுப் போனமையும் குறிப்பிடத்தக்கது.

செரீனா வில்லியம்ஸ், லின்சி லெவன் போர்ட், ஜெனீபர் கேப்பிறியாட்டி, வீனஸ் வில்லியம்ஸ் ஆகிய நான்கு அமெரிக்க வீராங்கனைகளும் முறையே மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் இடங்களை வகிக்கின்றனர்.

தொடர்ந்தும் முன்னணியில் திகழ்ந்த அமெரிக்க வீராங்கனைகளான வில்லியம்ஸ் ஜோடியை பெல்ஜிய வீராங்கனைகள் பின்தள்ளி விட்டு தாம் முன்னணியில் திகழ்வதோடு அதனைத் தக்கவைத்துக் கொண்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-68)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வைத்தியரின் சொந்தப் பாவனையில் நல்ல நிலையில் உள்ள TOYOTA HIACE விற்பனைக்கு உண்டு (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: T.PHONE -0777-589608

(7463)


# ஈழத்தவர்கள் அபாயக்குரல் எழுப்பும் போது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது எமது கடமை

## தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன்

(இந்தியா)

விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல. அது விடுதலைக்காகப் போராடுகின்ற ஓர் இயக்கம். இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய நேதாஜி மற்றும் சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோரின் இந்திய தேசிய இராணுவம் போன்று பிரபாகரன் தலைமையில் அவ்வியக்கம், தமது மண்ணை மீட்கப் போராடி வருகிறது.

அந்த வகையில், ஈழத் தமிழருக்கு உதவவேண்டிய கடப்பாடு இந்தியத் தமிழர்களுக்கு உண்டு. இதைத்தான் நான் செய்தேன். இதற்காகச் சிறை செல்வதை நான் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் பொடா நீதிமன்றில் அளித்த வாக்குமூலத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பயங்கரவாத பொடா சட்டப் பிரிவுகளின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் உடபடப் பொதுச் செயலாளர் சு.ப.வீரபாணடியன், இரா. பாவாணன், மருத்துவர் அ.தாயப்பன் மற்றும் சாகுல் ஹமீது ஆகியோர் மீது சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

நீதிபதி இராசேந்திரனின் பணிப்பின் பேரில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்து நீதிமன்றில் பழ.நெடுமாறன் எழுத்து மூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அவரது வாக்கு மூலத்தில்,

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள்.எங்களோடு இரத்த உறவு பூண்டவர்கள். சிங்களவரின் இரத்த வெறி கொண்ட இனப் படுகொலைக்குத் தமிழர்கள் உள்ளாக்கப்பட்டு அவர்கள் அபாயக்குரல் எழுப்பும் போது நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மனிதநேய உணர்வு கொண்டவர்கள் யாராக இருப்பினும் அப்படி சும்மா இருக்க முடியாது. அந்த வகையில்தான் நான் ஈழத்தமிழருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்துள்ளேன்.

இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தை இன்னமும் உயர் அதிகாரிகளால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றை ஆதரித்துப் பேசுவதே குற்றம் என்றால், பிரதமரும் துணைப்பிரதமரும் செய்வது மாத்திரம் நியாயமானதா?

எம்மீது அரசியல் உள்நோக்கத்துடன் பழிவாங்குவதற்காகவும் சனநாயக உரிமைகளை நசுக்கவுமே திட்டமிட்ட வகையில் பழி சுமத்தப்பட்டுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் 51 இற்கும் மேற்பட்ட உலக நாடுகள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்துள்ள இந்த நிலையில், அவை அனைத்தும் ஈழத் தமிழரின் ஏக பிரதிநிதியாக விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கீகரித்துள்ளன. ஆனால், இந்தியாவின் முன்னைய அரசியல்வாதிகளின் காழ்ப்புணர்வும், உள்நோக்கமுமே புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வைத்துள்ளது.

ஆனால், ஈழத் தமிழர்களுக்கு தமிழக, இந்திய அரசுகள் உதவ வேண்டும் என்பதைத் தான் நாங்கள் வற்புறுத்தி வருகின்றோம். ஈழத் தமிழர்களுக்கு உதவவேண்டிய கடமையை நான் செய்ததற்காக என் மீது பொடா சட்டம் ஏவப்பட்டுள்ளது.

ஈழத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வாழ வேண்டிய வயதில் தங்கள் மண்ணை மீட்பதற்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்யும்போது, அவர்களுக்கு ஆதரவாக இந்த வயதிலும் சிறை செல்லும் சிறு தியாகமேனும் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு நான் பெருமையடைகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.(உ-18)

### பாதிப்புற்ற மக்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்துகலாசார விவகார அமைசசர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கு, சந்திரபுரம், மட்டுவில் கிழக்கு ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்து யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களைச் சந்தித்து உரையாடினார்.

இதேவேளை அமைச்சின் ஏற்பாட்டில் மேற்படி கிராமங்களில் வீடமைப்பு திட்டம், மலசலகூடத் திட்டம் போன்றவை அமுல் செய்யபபடவுள்ளதாக தெரிவித்தார்.(உ-16)

### சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் துவிச்சக்கர வண்டியொன்று நேற்றைய தினம் களவாடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள மூன்றாம் குறுக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு வெளியில் துவிச்சக்கர வண்டியை பூட்டாமல் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டு உடனடியாகத் திரும்பிய போது துவிச்சக்கரவண்டி மாயமாக மறைந்துள்ளது என சம்பந்தப்பட்டவரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-7)

# ஐ.நாவில் உரையாற்றுவது பிரதமரே

# கோபி அனான் உறுதிப்படுத்தினார்

(கொழும்பு)

இம்மாதம் 26ஆம் திகதி நியூயோர்க்கில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த மாநாட்டில் இலங்கையின் சார்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. சபையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் ஆகிய இருவரில் யார் உரையாற்றுவது என்பது குறித்து எழுந்துள்ள சர்ச்சைக்கு முடிவாகவே பிரதமர் அங்கு உரையாற்றவுள்ளதாக ஐ.நா.சபையின் செயலகம் கடந்த ஞாயிறன்று உறுதிப்படுத்தியுள்ளது.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம கோபி அனான இது குறித்து தகவல் தெரிவிக்கையில்,

ஐ.நா.சபையின் வருடாந்த மாநாட்டில் இலங்கையின் சார்பாக ஜனாதிபதியா? பிரதமரா? உரையாற்றுவார் என்ற சர்ச்சை தொடர்ந்து கொண்டிருந்தது.



மாநாடு தொடர்பாக ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததே தவிர அவர் உரையாற்றுவார் என அதில் குறிப்பிட்டிருக்கவில்லை. எம்மால அனுப்பிவைக்கப்பட்ட அழைப்புக் கடிதம் தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சு மேலும் விளக்கத்தை எம்மிடம் கோரியிருந்தது. இவர்களின் கோரிக்கைக்கு அமைவாகவே எம்மால் அனுப்பி வைக்கப்பட்ட பதிலில் பிரதமர் ரணில் உரையாற்றுவார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் பல முக்கியமான விடயங்களை கவனிக்க வேண்டியிருப்பதால், இம்மாநாட்டில் கலந்துகொள்ள முடியாமல் உள்ளதாக வருத்தம் தெரிவித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயலாளர் நாயகத்திற்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (உ-18)

## ஆசிரியர் தின விழாக்களில்

# கறுப்பு கைப்பட்டி அணிந்து ஆசிரியர்கள் பங்கேற்பர்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதியன்று கொண்டாடப்படவுள்ள ஆசிரியர் தினத்தன்று அனைத்து ஆசிரியர்களும் கறுப்புக் கைப்பட்டி அணிந்து செல்ல வேண்டும் என ஆசிரியர் சங்கத் தலைவர் வசந்த தர்மசிறி கேட்டுள்ளார்.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குக் கல்வி அமைச்சு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இது நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

அன்று ஆசிரியர்களுக்கு சுகவீன லீவு விடுமுறை நாளாக இருக்கும். மேலும் அன்று ஆசிரியர்கள் கறுப்புக் கைப்பட்டி அணிந்து பாடசாலைகளுக்குச் சென்று அங்கு மாணவர்களால் நடாத்தப்படும் ஆசிரிய தின விழா முடிவுற்றதும்,சுகவீன லவில் வீடு திரும்பிவிட வேண்டும்.

எமது கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் எந்த நடவடிக்கைகளும் எடுக்காததால் நாம் இரண்டாம் தடவையாக சுகவீன லீவு எடுககவுள்ளோம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 10 மாத சம்பளப் பணம் கடனாக வழங்குவதென கல்வி அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தும், இன்னமும் அது வழங்கப்படவில்லை.

தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்குக் கூட இப்பணம் வழங்கப்படவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு அரசாங்கம், மாகாணசபைகளுக்கு போதிய நிதி வழங்கவில்லை. இவர்களுக்கு உடனடியாக வழங்கும் ஒருமாதச் சம்பளப் பணம் இன்னமும் வழங்கப்படவில்லை. அத்துடன், இவ்விடங்களிலுள்ள பிள்ளைகளுக்கு பாடசாலைப் புத்தகங்களும், சீருடையும் கூட இன்னமும் வழங்கப்படவில்லை. இவ்வாறு அவர் அடுக்கடுக்காய் குற்றஞ்சாட்டினார்.

(உ-6)

### மீளக்குடியேறியவர்களுக்கு உதவு பொருட்கள்

(மருதங்கேணி)

இராணுவநடவடிக்கை காரணமாக வவுனியா மன்னார் மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து அங்கு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்துவிட்டு மீண்டும் கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த 56 குடும்பங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம ஊடாக பாவனைப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-35)

## கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த) மாதிரிப் பரீட்சை – 2003

### பாடம் :-கணிதம்-I, (விடைகள்)

### பகுதி - I

01. C-7
02. $65cm^2$
03. x=2
04. ரூ. 144, 000
05. t = -4
06. $t = \frac{v-u}{f}$
07. (அ) $32°$ (ஆ) $55°$
08. 0.12
09. ஆறு
10. 3
11. (அ) 10 (ஆ) 13
12. (அ) -1 (ஆ) $\frac{2}{c-3}$
13. (அ) $180°$ (ஆ) வட்ட நாற்பக்கல்
14. (அ) 0.8 (ஆ) 0.75
15. (அ) $A\hat{C}B$ (ஆ) 7.2cm
16. (அ) $\frac{1}{2}$ (ஆ)12kg
17. (அ) ரூ.1.50 (ஆ)ரூ.360
18. AO இனை விட்டமாகக் கொண்ட வட்டப் பரிதி
19. (அ) ரூ. 800 (ஆ) 55
20. (அ) $000°$ (ஆ) மேற்கு
21. (அ) $90°$ (ஆ)5cm (இ) $24cm^2$
22. (அ) OB=OC, AB=AC (ஆ) $A\hat{B}O + A\hat{C}O = 180°$
23. (அ) 1:1000 (ஆ) $\frac{1}{1000}$ (இ)$1500m^2$
24. (அ) $\frac{1}{2}$ (ஆ) $\frac{1}{4}$ (இ) $\frac{1}{8}$
25. (அ) 1.1m (ஆ) 1.21m
26. (அ) 8 வருடம் (ஆ) ரூ.2000
27. (அ) 1600 (ஆ) ரூ. 32, 000 (இ) ரூ. 3840
28. (அ) x = -1 (ஆ) -2 (இ) (-1, -2)
29. (அ) 17.32 (ஆ) $\sqrt{2} - 1$ (இ) $C^{18}$
30. (அ) 6cm (ஆ) $36cm^2$ (இ) $216cm^2$

(பகுதி II இன் விடைகள் நாளைய வலம்புரியில்)



அளவெட்டி ஈஸ்வரன் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது விநோத உடைப் போட்டியில் பங்குபற்றிய மாணவன் ஒருவனை படத்தில் காண்கிறீர்கள். (படம்:- எஸ் கவிதரன்)

# 114 பேரின் க.பொ.த(உ/த) பெறுபேறுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இந்த வருடம் நடாத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர(உ/த) பரீட்சைக்கு தோற்றிய 114 மாணவர்களின் பெறுபேறுகள் பல்வேறு காரணங்களால் வெளியிடப்படாமல் இடைநிறுத்தி வைத்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜசூரிய தெரிவித்துள்ளார்.

பரீட்சைநிலையங்களில் மோசடிகள் செய்ததாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலே மேற்படி 114 மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை எனத் தெரியவருகிறது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இரு இடங்களில் பரீட்சைக்காக விண்ணப்பித்தமை கையடக்கத் தொலைபேசி பாவித்தமை தமக்குப் பதிலாக வேறு ஆட்களைப் பரீட்சைக்கு தோற்ற வைத்தமை உள்ளிட்ட மற்றும் பல தவறுகள் இடம்பெற்றதையடுத்தே,மேற்படி பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் கடந்த வருடத்தைவிட இம்முறை பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்றமை குறைவு எனக் குறிப்பிட்டுள்ள அவர், மேலும் இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

(உ-18)

# சிங்களப் பத்திரிகைக்கு எதிரான மனுவை மங்கள வாபஸ்

(கொழும்பு)

திவயின சிங்கள நாளிதளுக்கெதிராக 10 கோடி ரூபா நஷ்டஈடு கோரி முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தாக்கல் செய்த மனுவை அவர் வாபஸ் பெற்றதையடுத்து, மாவட்ட நீதிபதி லலித் ஜயசூரிய மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

சிங்கள ஆணைக்குழு அறிக்கை சம்பந்தமாக மங்கள சமரவீர திவயின பத்திரிகையில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்.


சிங்கள ஆணைக்குழு அறிக்கை வரலாற்றில் குப்பைக் கூடைகளுள் போடப்பட வேண்டிய ஒன்று என மங்கள சமரவீரவின் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையுடன் கடிதம் ஒன்றும் பிரசுரிக்கப்பட்டமை தனது அந்தஸ்துக்கு கேடுவிளைவித் துள்ளதாகத் தெரிவித்து மங்கள சமரவீர மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தாா. நஷ்டஈடாக 10 கோடி ரூபா பெற்றுத்தரவேண்டுமென்றும் கோரியிருந்தார்.

நேற்று நடைபெற்ற விசாரணையின்போது மேற்கூறப்பட்ட மனுவினை தான் வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவித்ததையடுத்து, நீதிபதி லலித்ஜெயசூரிய மனுவைதள்ளுபடி செய்தார்.

மனுவை ஆதரித்து ஜனாதிபதி சட்டத்தரணி விஜதாஸ ராஜபக்ஷ ஆஜராகியிருந்தார். (உ-6)

## அமைச்சின் வேலையை உணர்ந்த அமைச்சர்




# புலிகளின் யோசனை நிராகரிக்கப்பட்டால் சமாதானப் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை

## வன்னிச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் இதனையே வலியுறுத்தியதாக அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதியை எவ்



மொரு மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக யப்பானின் சிறப்புத் தூதர் யசூசி அகாஷி தொவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு கலதாரி கோட்டலில் நடைபெற்ற செய்

யில் சந்தித்தபோது தெரிவித்திருந்தார்.

அவ்வாறு தம்மால் சமர்ப்பிக்கப்படும் யோசனைகளை அரசு ஏற்றுக கொள்ளாவிட்டால் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்பப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் முன்னேற்றப் பாதையை நோக்கி நகர வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடச் செய்யவேண்டும்.

இத்தகையதொரு முன்னேற்ற

மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். நஷ்டஈடாக 10 கோடி ரூபா பெற்றுத்தரவேண்டுமென்றும் கோரியிருந்தார்.

நேற்று நடைபெற்ற விசாரணையின்போது மேற்கூறப்பட்ட மனுவினை தான் வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவித்ததையடுத்து, நீதிபதி லலித்ஜெயசூரிய மனுவைதள்ளுபடி செய்தார்.

## வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ

(வேலணை)

வேலணை கிராமிய வைத்தியசாலைக்கு சுகாதாரத் திணைக்களம் புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்றை வழங்கவுள்ளது.

இவ்வைத்தியசாலையில் நீண்டகாலம் அம்புலன்ஸ்வண்டி இல்லாதிருந்த காரணத்தினால் இங்குவரும் அவசர நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-47)

# வலியுறுத்தியதாக அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதியை எவ்



வாறு செலவிடுவது என்பது குறித்து கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மாநாடு போன்று மேலுமொரு மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக யப்பானின் சிறப்புத் தூதர் யசூசி அகாஷி தொவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு கலதாரி கோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கான யோசனைகளை தமிழீழ விடுதலைப புலிகள் இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்தபோது தெரிவித்திருந்தார்.

அவ்வாறு தம்மால் சமர்ப்பிக்கப்படும் யோசனைகளை அரசு ஏற்றுக கொள்ளாவிட்டால் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்பப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதியை வடக்குக் கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு, இடைக்கால நிர்வாக கட்டமைப்பின் ஊடாகபெறவேண்டும் என தாம் எதிர்பார்கின்றதாகவும் சு.ப.தமிழ்ச்செல்வன் என்னிடம் தெரிவித்தார்.

ஆகவே இடைக்கால நிர்வாக கட்டமைப்பிற்கான புலிகளின் திருத்த ஆலோசனைகளை அரசு ஏற்றுக் கொள்வதுடன் அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் முன்னேற்றப் பாதையை நோக்கி நகர வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடச் செய்யவேண்டும்.

இத்தகையதொரு முன்னேற்றகரமான நிலை ஏற்பட்டாலே உதவி வழங்கும் நாடுகள் மேலும் நிதியை வழங்க முன்வரும்.

அவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படாதுவிட்டால் வடகொரியா போன்ற வேறு நாட்டுப் பிரச்சினைகளில் சர்வதேச கவனம் திரும்பிவிடும் அபாயம் உள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (உ-10)

# இவ்வாண்டின் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டிற்கான சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு திருநெல்வேலி விவசாயப்பயிற்சி நிலைய வளாகத்தில் யாழ்.உதவி விவசாயப்பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குக்கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி சி.ஞானச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும் கலந்துகொள்ளவுளனர்.

12 விவசாயப் போதனாசிரியர் பிரிவிலும் நெற்செய்கை, உப உணவுப் பயிற்செய்கை, வதிவிடப் பயிர்செய்கை ஆகிய மூன்று வகைப் படுத்தல்களில் தலா ஒவ்வொருவர் சிறந்த விவசாயிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் சிறந்த விவசாயிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட 36 பேரினதும் பெயர் விபரங்கள் விவசாயப் போதனாசிரியர் பரிவு ரீதியாக வருமாறு,

*புங்குடுதீவு*

நெற்செய்கை:-ஐ.வைத்திலிங்கம்
5ஆம் வட்டாரம், நெடுந்தீவு
உபஉணவு:-நா.முத்துலிங்கம்
6ஆம் வட்டாரம்,நயினாதீவு
வதிவிட வேளாண்மை:-
நா.சண்முகராசா
1ஆம் வட்டாரம்,புங்குடுதீவு

*வேலணை*

நெற்செய்கை:- திருமதிவேளுரினேஸ்வரி
நாவற்கண்டி, காரைநகர்
உபஉணவு:-நா.விவேகானந்தராசா
மண்கும்பான் மேற்கு, வேலணை
வதிவிட வேளாண்மை:- யுகர்சன்
புளியங்கூடல்தெற்கு

*நல்லூர்*

நெற்செய்கை:-ஐ.மாரிமுத்து
12,செம்மணி ஒழுங்கை, அரியாலை
உபஉணவு:-த.கனகசபை
குமரகோட்டம், கோண்டாவில்
வதிவிட வேளாண்மை:-
திருமதி.ம.உதயகுமாரி
80,புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை

*தொல்புரம்*

நெற்செய்கை :-பொ.குகானநந்தன்
சுழிபுரம் மேற்கு
உபஉணவு:-சி.சிதம்பரலிங்கம்
ஆஸ்பத்திரியடி, மூளாய்
வதிவிடவேளாண்மை:-
வை.ஜீவரத்தினம்
வட்டு தென்மேற்கு,வட்டுக்கோட்டை

*கீரிமலை*

நெற்செய்கை:-க.தம்பையா
பெரியவிளான், இளவாலை
உபஉணவு:-சி.தவராசா
காஞ்சிபுரம், மாதகல்
வதிவிட வேளாண்மை:-
மு.சேனாதிராசா
அளவெட்டி மேற்கு

*உடுவில்*

நெற்செய்கை:-பொ.தங்கவேல்
தொம்பை வீதி,உடுவில்
உபஉணவு:-ம.பிறேமதாஸ்
அம்மையார் தோட்டம்,
உடுவில் கிழக்கு
வதிவிட வேளாண்மை:-
ச.வைத்தீஸ்வரன்
அயட்டயப்புலம், குப்பிழான் மேற்கு,
ஏழாலை

*உரும்பிராய்*

நெற்செய்கை:-க.சிவதாசன்
நீர்வேலிதெற்கு
உபஉணவு:-மு.நவரத்தினம்
பலாலிவீதி உரும்பிராய் தெற்கு
வதிவிட வேளாண்மை:-
க.வைரவநாதன்
கரந்தன் சந்தி,நீர்வேலிதெற்கு

*புத்தூர்*

நெற்செய்கை:-க.மயில்வாகனம்
புத்தூர்கிழக்கு
உபஉணவு:-வி.செல்வராசா
சிறுப்பிட்டி மேற்கு
வதிவிட வேளாண்மை:-இ.லட்சுமணர்
அச்செழு, நீர்வேலி

*கைதடி*

நெற்செய்கை:-வே.கதிர்காமநாதன்
கைதடி வடக்கு
உபஉணவு:-சே.லிங்கநாதன்
கைதடி மேற்கு
வதிவிட வேளாண்மை:-வ.மகாலிங்கம்
மட்டுவில் வடக்கு,சந்திரபுரம்

*சாவகச்சேரி*

நெற்செய்கை:-த.கஜேந்திரன்
தாவளை இயற்றாலை,வரணி
உபஉணவு:-செ.இராமலிங்கம்
சங்கத்தானை.சாவகச்சேரி
வதிவிட வேளாண்மை:-கு.முகுந்தன்
மட்டுவில் கிழக்கு

*புலோலி*

நெற்செய்கை:-க.இராமநாதன்
மாவில் றோட்,புற்றளை, புலோலி
உபஉணவு:-க.சின்னத்துரை
துலாக்கட்டு,வதிரி, கரவெட்டி
வதிவிட வேளாண்மை:-
ந.பாஸ்கரசோதி
சின்னக்கடை, பொலிகண்டி கிழக்கு

*அம்பன*

நெற்செய்கை:-க.சற்குணராசா
குடத்தனை மேற்கு
உபஉணவு:-திருமதி.ந.பரமேஸ்வரி
செம்பியன்பற்று தெற்கு
வதிவிட வேளாண்மை:-மு.கந்தசாமி
வத்தராயன் தெற்கு (உ)

## பணிநீக்கம் ரத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் தாக்கப்பட்டவேளை அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த எயார் கொமடோ ஆர்.ஏ.ஆனந்த பதவி நீக்கம செய்யப்பட்டதை எதிர்த்து அவரால் தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொளளப்பட்டது.

இவரது பதவி நீக்கத்தை ரத்துச் செய்வதென்றும் இவரை சேவையிலிருந்து ஓய்வு பெற்றவராகக் கருதி பதவி நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து கொடுப்பனவுகள் வழங்குவதென்றும் இருதரப்பும் ஒரு முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டதை யடுத்து உயர் நீதிமன்றமும் இதனை ஏற்றுக் கொண்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மார்க்பெர்ணாண்டோ, சி.வி.விக்கினேஸ்வரன், டி.பி.வீரசூரிய ஆகியோரே இம்முடிவுக்கு இணைந்து தீர்ப்பு வழங்கினர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் திகதியன்று புலிகளால் விமான நிலையம் தாக்கப்பட்டது குறித்த விசாரணையின் பின் குற்றவாளியெனக் காணப்பட்டு இவரைப் பதவி நீக்கம் செய்யும்படி விசாரணைக் குழுவினர் சிபாரிசு செய்திருந்தனர்.இதனை எதிர்த்து இவர் உயர் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவின் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றபோது இருதரப்பினரும் ஒருமித்த முடிவுக்கு வந்தனர். இம்முடிவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்தது.(உ-06)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 32

கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்கள் பெயர் விபரம் வருமாறு:

01. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
02. சி. ஜோதிகா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
03. ச. அகலியா- சங்கானை சிவப்பிரகாச மாகாவித்தியாலயம்
04. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
05. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
06. யோ. விதுஷ்ஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
07. பே. கலையரசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
08. ம. மதரூபன்- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
09. கு. பர்மினா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
10. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
11. இ.வித்தியாகரன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
12. க. விபிஜா- ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை
13. சி. தர்ஸிகா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
14. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
15. செ. அருணன்- மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்
16. யோ. டினோஜன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
17. பா. கோகிலன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
18. யோ. துஷிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
19. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
20. சா. விஜிகலா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
21. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
22. வி. விதுர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
23. சி. கனிஷ்ரா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
24. த. கிருத்திகா- வரணி மகாவித்தியாலயம்
25. வே. நிரூஜன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
26. கு. நிலுக்ஷா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
27. பா. சிவனருட்செல்வசர்மா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
28. சி. மயூரதன்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
29. க. லக்ஷனா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
30. ஆ. கஜீபன்- யா/ மத்திய கல்லூரி
31. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
32. ச. றஜீதா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலம்
33. சி. சரணிகா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
34. வி. நிரோஜன்- தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
35. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
36. சி. டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
37. ச. திவிஜன்- உடுவில் மகளிர் கல்லூரி
38. ப. தர்மிளா சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
39. சி. மிறோஜி- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
40. அ. ராஜ்கரன்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
41. த. தபேர்ஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
42. யோ. ஜென்சிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
43. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
44. செ. துவாரகன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வராக் கல்லூரி
45. ஜெ. கீர்த்திகா- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வராக் கல்லூரி
46. த. சுகன்யா- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வராக் கல்லூரி
47. து. பிரபானந்தி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
48. ம. மதுஷா- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
49. சி. தர்சிகா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
50. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
51. கு. சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
52. வே. பிரசன்ஜா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

102. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
103. சி. வாதுசா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
104. சு. ரேசிஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
105. ம. கீர்த்தனா- ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்
106. ம. ஜனனி- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
107. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி
108. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க. பாடசாலை
109. பா. அனுசியா- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
110. ப. சிவருக்ஷி- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
111. சி. சஸ்மிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
112. மோ. சித்திராங்கன்- தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
113. ந. நிரோசன்- யா/மத்திய கல்லூரி
114. ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
115. யோ. கௌசல்யா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
116. சி.வர்ணன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
117. யோ. சரண்யா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
118. த. ஜெனூறன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்
119. மோ. தாட்சாயினி- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்
120. சி. லக்சாயினி சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
121. சி. சாதோக்- யா/மத்திய கல்லூரி
122. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
123. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
124. க. அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
125. த. சர்மிலன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
126. எஸ். ஸ்ரெலா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
127. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
128. ம. சரண்யா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
129. ம. அபிவர்ஷனி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
130. க. நிறோசன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
131. சி. சேர்யன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
132. தி. உமாசங்கரி - சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
133. ஜெ. பார்த்தீபா- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
134. செ. றகீம்டீநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
135. கா. கஜீபன்- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
136. அ. கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
137. கு. விஜிதா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
138. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
139. பே. நிதர்சகுமார்- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
140. தி. யசோதினி- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
141. த. பமிஸ்தா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
142. பி. டிபன்ராஜ்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
143. ம. சிறோமியா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
144. யோ. வொசின்ரன்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
145. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
146. நா. நளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
147. இ. மிதூசன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
148. கு. நிரோஜன்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
149. இ. நிரோக்குமார்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
150. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை

# ஸ்ரீ.சு.கட்சி~ஜே.வி.பி. கூட்டு முறிவு

## ஜனாதிபதியே காரணம்

## சகோதரன் அனுரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் ஏற்படவிருந்த கூட்டு முயற்சி தோல்வியடைந்தமைக்கு தனது சகோதரி ஜனாதிபதி சந்திரிகாவே காரணம் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி யின்

கட்சியின் 52 ஆவது ஆண்டு விழாவில் பெருமளவில் மக்கள் கலந்து கொண்டது உண்மையே. இதுதகைய கூட்டமொன்றை இனிமேல் கொழுமபில் நடத்தினால் அரைவாசிப் பொது மக்களைக்கூடத் திரட்டமுடியாது என்றும் அனுராபண்டாரநாயக்கா விரக்

## வினாத்தாள் 32-ன் விடைகள்

01 (3) 02. (2) 03. (3)
04. (4) 05. (4)
06. காடு
07. மரம்
08. உரிய
09. தீங்கு
10. அழித்தல்
11. தடை
12. நகரம்
13. குறைத்தல்
14. காடு,வீட்டை
15. அழித்தான்
16. (2) 17. (3)
18. (3) 19. (2) 20. (4)
21. வாகனங்கள் செல்லமுடியாது. தரித்து நிற்கவும்.
22. புறப்பட ஆயத்தமாகுக.
23. வாகனங்கள் செல்லலாம்.
24. பச்சை அம்பு வெளிச்சம் உள்ள பக்கம் செல்லலாம்.
25. போக்குவரத்து,கண்காணிப்பு பொலிஸாரினால கட்டுப்படுத்தப்படுகிறது.
26. குறடு, கம்பிவெட்டல், கம்பியாலன கட்டுக்களை இறுக்குதல், இலகுவாக்கல்
27. நுணுக்குக்காட்டி,சிறியபொருளை பெரிதாக்கிப்பார்த்தல்
28. பாக்குவெட்டி,பாக்கை இலகுவாக வெட்டல்
29. காந்தம்,இரும்பாலான பொருளைக் கவருதல்
30. சுட்டியல், ஆணி அடித்தல்
31. ✓ 32. ✗
33. ✗ 34. ✗ 35. ✗
36. 1.சதுரமுகி, 2. கனவுரு
37. உருளை
38. 125.75 கிலோமீற்றர்
39. ரூபா.1200.00
40. 999 999
41. 180
42. 8Kg நிறையைஉயர்ந்துள்ள பக்கத்திற்கு
43. 7 மணி 3 நிமிடம்
44. **A, D**
45. 1, 4
46. செய்மதி வழி
47. தொலைபேசி
48. பார்த்து எழுதுதல்
49. சுரங்கவழி
50. சந்தேகம்
51. 3,4
52. 28
53. 800அ
54. 27முப 850ப
55. 1515
56. மருந்து
57. நண்பன்/நண்பி
58. சகோதரி
59. அம்மா
60. பச்சை
61. வைத்தியசாலை
62. Tooth Paste

46. த. சுகன்யா- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வராக் கல்லூரி
47. து. பிரபானந்தி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
48. ம. மதுஷா- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
49. சி. தர்சிகா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
50. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
51. கு. சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
52. வே. பிரசன்ஜா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
53. இ. இராஜப்பிரசாந்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
54. ச. சோபிகா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
55. ந. நக்கீரன்- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
56. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
57. இ. சிந்துஜா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
58. நா. தேனுயா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
59. க. நிகிந்தினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
60. க. அகிலன்- வரணி மகாவித்தியாலயம்
61. மா. சர்மிளன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
62. ஆ. நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை
63. ஜி. அபர்ணா- கொட்டடி நம்சிவாய வித்தியாலயம்
64. ச. நந்துஜா- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
65. அ. எட்வின்ஜோய்- யா/சென்ஜோன்ஸ் கல்லூரி
66. க. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
67. ர. மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
68. பூ. திலக்ஷி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
69. செ. கலையரசி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
70. ந. லோஜிதன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
71. இ. அனுஷா- கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
72. செ. தஸ்மளா- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
73. கே. சோபனா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
74. த. ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
75. இ. அன்சிகர்- ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்
76. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
77. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
78. லி. கருஷன்- இணுவில் மத்திய கல்லூரி
79. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
80. அ. ஜனதன்- யா/பரியோவான் கல்லூரி
81. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
82. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
83. சி. சிவநேசன்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்
84. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
85. ஸ்ரீ. கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
86. ச. லசிகலா- யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
87. கீ. அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
88. நா. காமினி- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
89. இ. பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
90. மோ. சோதீபன்- மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
91. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
92. க. நிரோஜன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
93. இ. இராஜப்பிரவிந்தன்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
94. த. கௌரி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
95. பு. உஷ்சாந்தி- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
96. ம. கீர்த்திகன்- இணுவில் மத்திய கல்லூரி
97. பா. கௌசிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
98. த. சுபீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
99. இ. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
100. அ. அகல்யா- சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை
101. பா. துஷாந்தி- யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்

ஜே.வி.பியுடன் ஏற்படவிருந்த கூட்டு முயற்சி தோல்வியடைந்தமைக்கு தனது சகோதரி ஜனாதிபதி சந்திரிகாவே காரணம் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி யின் சகோதரனுமான அனுராபண்டாரநாயக்கா நேரடியாகக் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அனுராபண்டாரநாயக்கா மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும்,ஜே.வி.பியினதும் கூட்டுத் தொடர்பான பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்று வந்ததாகவும், இறுதியாக ஜனாதிபதியுடனான சந்திப்புடனேயே அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. இந்த விடயத்தில் தனக்கும், ஜனாதிபதிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜே.வி.பியின் அனுசரணை இல்லாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெறுவது இயலாத காரியமாகும். குருநாகலையில் இடமபெற்ற

பெருமளவில் மக்கள் கலந்து கொண்டது உண்மையே. இததகைய கூட்டமொன்றை இனிமேல் கொழுமபில் நடத்தினால் அரைவாசிப் பொது மக்களைக்கூடத் திரட்டமுடியாது என்றும் அனுராபண்டாரநாயக்கா விரக்தியுடன் தெரிவித்துள்ளார். (ம)

## வன்னிய சிங்கம் நினைவுக் கூட்டம

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்த் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கோப்பாய் கோமகன் அமரர் கு. வன்னியசிங்கத்தின் 44வது நிறைவு தினக் கூட்டம் இன்று மு.ப. 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். பணிமனையில் நடைபெறுகின்றது.

கூட்டணிப் பிரமுகர் க. சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தமிழர் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முன்னாள் மாநகரசபை உறுப்பினர் எஸ். விஜயரத்தினம்உட்படவேறும பலர் உரை நிகழ்த்துகின்றனர். (உ-16)

56. மருந்து
57. நண்பன்/நண்பி
58. சகோதரி
59. அம்மா
60. பச்சை
61. வைத்தியசாலை
62. **Tooth Paste**
63. **School**
64. **Envelop**
65. **Doctor**
66. (1) 67. (3) 68. (2)
69. (4) 70. (5)
71. உணவு, உடை, உறையுள்
72. ஒ்ளியை சுயமாக வெளிவிடக் கூடிய பொருள்
73. பாதுகாப்பாக பொதி செய்தல்
74. நனகு பழுக்கமுன் கொண்டு செல்லல்
75. எலி முதலான விலங்குகளிடமிருந்து பாதுகாத்தல்

76. -81.வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய்,பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

# முல்லை வைத்தியசாலை வளவில் மிதிவெடிகள் முற்றாக அகற்றப்படவில்லை

## புனரமைப்புப் பணிகள் தாமதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த புனரமைப்புப் பணிகள் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் அகற்றப்படாமையால் தாமதமடைந்துள்ளன.

கடந்த 1990ஆம் ஆண்டில் இடம்பெற்ற ‘‘கடற்காற்று’’ இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவத்தினா முல்லைத்தீவை ஆக்கிரமித்திருந்த வேளை, அப்பகுதி முழுதும் பெருமஅழிவுக்கு உள்ளாகியிருந்தன.

அதன்பின்னர், 1996ஆம்ஆண்டு வடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஓயாதஅலை-01 நடவடிக்கை மூலம் முல்லைத்தீவு மீட்கப்பட்டதன் பின்னர் அப்பகுதிகளில் மக்கள் படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றனர். மீளக்குடியேறிய மக்களுக்கான உதவிகள் மற்றும் புனரமைப்புப் பணிகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சொந்தக் கட்டடத்தில் இயங்க இயலாது தற்காலிக கொட்டகைகளில் இயங்கிவருகின்றது. இந்த நிலையில் அவ்வைத்தியசாலைப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, மேற்படி வைத்தியசாலையை புனரமைப்பதற்கு ஏற்றதாக சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டு வந்தபோது 2 மிதிவெடிகள் வெடிக்காத நிலையில் இருப்பதை அடுத்து சிரமதானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு அவை அகற்றப்பட்டன.

அதேவேளை, அங்கு மேற்கொள்ளப்பட்ட மிதிவெடி அகற்றும் பணியின்போது மேலும் பல வெடிபொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்தே,மேற்படி வைத்தியசாலைப் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், வெடிபொருட்கள் அகற்றப்பட்டதும் மீண்டும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

(உ-43)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 34

ஆக்கம்: சுந்தர் வெளியீடு

★ கீழ்வரும் உருக்களால் காட்டப்படுவோரை நன்கு அவதானித்து அவர்கள் இலங்கையில் வாழும் எந்த இனத்தொகுதிக்குரியவர்கள் என எழுதுக.



உரு 1 உரு 2 உரு 3 உரு 4

01) உரு 1 .......................................... 02) உரு 2..........................................
03) உரு 3 .......................................... 04) உரு 4..........................................

★ இந்த உருவுக்குரியவர்களில் பெரும்பான்மையானோர் பின்பற்றும் மதத்தை எழுதுக.


05) உரு 1 .......................................... 06) உரு 2..........................................
07) உரு 3 .......................................... 08) உரு 4..........................................

★ கீழே தரப்பட்டுள்ள பண்டிகைகளுடன் தொடர்புடைய உருவுக்குரியவர்களின் பெயர்களை எழுதுக.

09) பொசன் பூரணை.............................. 10) கிறிஸ்மஸ் தினம்..............................
11) ரம்சான் பெருநாள்.............................. 12) மகா சிவராத்திரி..............................
13) உரு 3 இற்குரியவர்கள் என்ன நோக்கத்தோடு இலங்கைக்கு வந்தார்கள்?..............
14) இலங்கையை ஆட்சி செய்த அந்நியர் மூவரின் பெயர்களைத் தருக?
.............................. .............................. ..............................
15) இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து எப்போது சுதந்திரம் பெற்றது?..............
16) இலங்கையின் ஆதிக்குடிகள் யாவர்?..............................
17) இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல் எது?..............................
18) இலங்கையில் கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள இரு இடங்களின் பெயர்களைத் தருக?.............................. ..............................
19) இலங்கையில் ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை எங்கே அமைந்துள்ளது?
..............................................................

★ ஒரு புத்தக அடுக்கில் இலக்கியப் புத்தகங்களைப் போல் 3 மடங்கு கதைப்புத்தகங்களும் 1/4 பங்கு ஆங்கிலப் புத்தகங்களும் இருந்தன. ஆனால், இலக்கியப் புத்தகங்களில் 1/2 மடங்கு இலக்கணப் புத்தகங்களும் இருந்தன. இலக்கணப் புத்தகங்களின் எண்ணிக்கை 50 எனில்

20) இலக்கியப் புத்தகங்கள் எத்தனை இருந்தன?..............................
21) கதைப்புத்தகங்கள் எத்தனை இருந்தன?..............................
22) ஆங்கிலப் புத்தகங்கள் எத்தனை இருந்தன?..............................




23) இவ்வுருவின் சுற்றளவு யா?
..............................
24) இதனைச் சூழ நான்கு நிரைகளில் வேலியடைக்கத் தேவையான முட்கம்பியின் நீளம் யாது?
..............................

★ ஒரு விழாவிற்கு 280 பேர் வருகை தந்திருந்தார்கள். ஆனால், அவ்விழாவிற்கு எதிர்பார்க்கப்பட்டோரின் எண்ணிக்கை 325 பேர். விழாவிற்கு வருகை தந்தோரில் 1/4 பகுதியினர் சிறுவர்களாவர். சிறுவர்கள் எல்லோரும் தமது தாய், தந்தையருடனேயே வந்திருந்தனர்.
*(குறிப்பு: – ஒரு குடும்பத்தின் சார்பில் ஒரு சிறுவனே விழாவில் கலந்துகொண்டார் எனக்கொள்க.)*
சிறுவர்களின் எண்ணிக்கையின் 1/10 பங்கினர் விழாவிற்காக வெளியிலிருந்து அழைக்கப்பட்டோர் ஆவர். மிகுதியானவர்கள் அவ்விழா அமைப்பாளரும், நலன்விரும்பிகளும் ஆவர். விழாவில் பிரசன்னமாயிருந்த பின்வருவோரின் எண்ணிக்கையைக் காண்க.

25) சிறுவர்களின் எண்ணிக்கை ..............................
26) பெற்றோர்களின் எண்ணிக்கை ..............................
27) வெளியில் இருந்து அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
..............................


★ இவ்விழாவில் விழா அமைப்பாளரும் நலன்விரும்பிகளும் தவிர ஏனைய யாவருக்கும் கேக் துண்டும், தேநீரும் வழங்கப்பட்டது. இதற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு 2604/= ரூபா ஆகும்.

28) ஒரு ஆளுக்கான செலவு யாது? ..............................
29) தேநீரின் விலை 2.75/= எனின் கேக்துண்டொன்றின் விலை என்ன?
..............................
30) விழாவிற்காக எதிர்பார்க்கப்பட்ட எல்லோருக்கும் கேக் துண்டு வழங்குவதற்காக கேக் துண்டுகள் வாங்கப்பட்டிருப்பின் அதற்காக கொடுக்கப்பட்ட பணத்தின் பெறுமதி என்ன?..............................

★ பின்வருவனவற்றுள் சரியான எழுத்துடைய சொல்லின் கீழ் கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 31) | 1. தேத்தண்ணி | 2. தேத்தண்ணீர் | 3. தேநீர் | 4. தேனீர் |
| 32) | 1. பிரையானம் | 2. பிறயானம் | 3. பீரயாணம் | 4. பிறைஞானம் |
| 33) | 1. இளனி | 2. இழநீர் | 3. இளநி | 4. இளநீர் |
| 34) | 1. வெண்ணை | 2. வென்னை | 3. வெண்நெய் | 4. வெண்ணெய் |
| 35) | 1. விஞ்ஞானம் | 2. விய்யானம் | 3. விஞ்யானம் | 4. விஞ்ஞாணம் |

★




அருகிலுள்ள படமானது ஒருவாரகாலமாக தொலைக்காட்சியில் காட்டப்பட்ட குழந்தைகளுக்கான, இளைஞர்களுக்கான, முதியோருக்கான நிகழ்வுகள் பற்றிய விபரமாகும். இதனடிப்படையில் 36-40 வரையான வினாக்களுக்கு விடையெழுதுக.


36) குழந்தைகளுக்கு மட்டுமான நிகழ்ச்சிகள் எத்தனை காட்டப்பட்டன?..............
37) குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் மட்டும் பொதுவான நிகழ்ச்சிகள் எத்தனை காட்டப்பட்டன?..............................
38) எல்லோரும் பொதுவாகப் பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகள் எத்தனை காட்டப்பட்டன?
..............................
39) குழந்தைகளும், முதியவர்களும் பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகள் எத்தனை காட்டப்பட்டன?
..............................
40) குழந்தைகள் பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகள் எத்தனை காட்டப்பட்டன?

..............................

★ இன்னும் மூன்று வருடங்களில் லதாவின் வயது அவளது மகள் சுமணாவின் வயதைப்போல் மூன்று மடங்காகும். இப்போது சுமணாவின் வயது 12 ஆயின்,

41) தற்போது லதாவின் வயது என்ன? ..............................
42) மகள் பிறந்தபோது லதாவின் வயது யாது? ..............................

★ கீழ்வரும் உருவங்களுக்கமைய வினாக்களுக்கான சரியான விடையினைக் காண்க.




43) சிவப்புநிறப் பூக்கள் மஞ்சள் நிறப் பூக்களைவிட வேறு பூக்களும் இருக்கக் கூடும் (சரி / பிழை)
44) வேறு நிறப் பூக்கள் இருக்குமாயின் அவை எல்லாம் ஒரே நிறமானவை (கூறலாம் / கூறமுடியாது)
45) உருவின்படி மொத்தமாக 3 நிறப் பூக்களே உண்டு. (கூறலாம் / கூறமுடியாது)

★ சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அருகிலுள்ள பெட்டியில் இடுக.

46) அழிந்துபோன வணக்கத்தலங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. ''புனர்நிர்மாணம்'' என்பதன் பொருள்
1) பழுதுபார்த்தல் 2) அபிஷேகம் செய்தல்
3) மீண்டும் கட்டுதல் 4)பெரிப்பித்துக் கட்டுதல்
47) திணைக்கள உபயோகத்திற்காக கனரக வாகனங்கள் பல கொள்வனவு செய்யப்பட்டன. ''கனரக வாகனங்கள்'' என்பதன் பொருள்
1) கனவான்கள் பயணம் செய்யும் வாகனங்கள்
2) சிற்றூழியர்கள் உபயோகிக்கும் வாகனங்கள்
3) அதிகபொருள் ஏற்றக்கூடிய வாகனங்கள்
4) நிறைகூடிய வாகனங்கள்
48) முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார் என்பது கண்கூடு. ''கண்கூடு'' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்
1) வெளிப்படை 2) நிச்சயம் 3) உண்மை 4) இயற்கை
49) பாடசாலை விட்டு விலகிய பின்னரும் மாணவர்கள் தம்மைக் கற்பித்த ஆசிரியருக்கு மரியாதை செய்யவேண்டும். ''மரியாதை'' என்பதற்குப் பொருத்தமான எதிர்க்கருத்துளள சொல
1) அலட்சியம் 2) பரகசியம் 3) அவமரியாதை 4) உதாசீனம்
50) ஒரு மனிதன் பிறந்து அவன் இறக்கும் வரையிலுள்ள காலம்
1) சகாப்தம் 2) தசாப்தம் 3) தலைமுறை 4) பரம்பரை

★ இதுவரை நீங்கள் கற்ற பாடல்களில் கீழ்வரும் சந்தர்ப்பங்களின் போது பாடப்படும் பாடல்கள் ஒவ்வொன்று தருக.

51) ஆடிப்பிறப்பு ..............................
52) மீனவர் பாடல்/கடற்கரைப் பாட்டு ..............................
53) காடழித்தல் ..............................
54) தாலாட்டு ..............................
55) தைப்பொங்கல் ..............................
56) அம்மன் பாடல் ..............................
57) பந்தடித்தல்/விளையாடல் ..............................
58) நாற்றுநடுகை/தொழிற்பாடல் ..............................

★ கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களில் சரியான பொருளைத் தரும் தமிழ்ச் சொல்லைத் எழுதுக.

**59) Foot Ball..............................** **60) batminton..............................**

★ கீழ்வரும் பாடலை கவனமாக வாசித்து சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

*மரம் ஒன்றை நாட்டுவீராயின்*
*நாடு அழகுபெறும் மண் வளமுறும்*
*மரங்களின் நிழல் குளிர்மை தரும்*
*மலர்கள் எம்மை விளிக்கும்*
*இனிய பழங்கள் எம் பசி தீர்க்கும்*

*பாடலுடன் தொடர்புபடும் கீழ்வரும் கூற்றுக்களில் பாடலில் சொல்லப்பட்ட கருத்துடன் ஒத்துவரும் கூற்றுக்கு நேரே ''ச'' எனவும் மற்றையதுக்கு நேரே ''சா'' எனவும் எழுதுக.*

61) மரங்களால் நாடு அழகு, நிழல், குளிர்மை பெறும்.
62) எம் பசிக்கு மரங்கள் மட்டும் போதுமானவையல்ல.

★ கீழே தரப்படும் சொற்களின் எதிர்க்கருத்துடைய சொற்கள் பாடலில் உண்டு. அவற்றைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

63) அவலட்சணம் :..............................
64) வெயில் :..............................
65) வெப்பம் :..............................
66) காய்கள் :..............................

★ கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய சரியான தமிழ்ச்சொல்லை பாடலில் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

**67) Tree...... ..............................** **68) Fruit..............................**
**69) Flower..............................** **70) Country..............................**

★ கீழ்வரும் தமிழ்ச் சொற்கள் குறிக்கும் சரியான ஆங்கிலச் சொற்களை சரியான ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.

71) அழகு :..............................
72) பால் :..............................
73) ஆசிரியர் :..............................
74) கிளி :..............................
75) காடு :..............................

★ ''புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய நான்.....'' என்னும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலையுடன் அமைந்த ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 4 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

76) ..............................
77) ..............................
78) ..............................
79) ..............................
80) ..............................
81) ..............................

## இன்று ஒரு தகவல்

# விக்கல்

சிலருக்கு அடிக்கடி விக்கல் வரும். அது நோயா? அல்லது ஒரு சாதாரண நிலையா? என்று கேட்டால் சில நேரங்களில் அது ஒரு நோய்தானாம். சில நேரங்களில் சாதாரண நிலையாம். இதனைப்பற்றி நாம் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொண்டோமானால் அதனை எப்படி தடுக்கலாம் அல்லது விக்கல் வரும் போது எப்படிக் கட்டுப்படுத்தலாம் எனும் விபரம் நமக்குத் தெரியும்.

இந்த விக்கல் எப்படி வருகின்றது என்றால் கழுத்தின் பின்னால் ஒரு நரம்பு உள்ளது. இந்த நரம்புதான் நமது சுவாசப் பைகளுக்கும், அடிவயிற்றுக்கும் நடுவில் இருக்கக்கூடிய தட்டுப்போன்ற ஒரு தசையைக் கட்டுப்படுத்துகின்றது. இந்தத் தட்டுப்போன்ற தசைதான் சுவாசப்பைகள் ஒரேமாதிரியான அளவுடன் விரிவதற்கும், சுருங்குவதற்கும் உதவி புரிகின்றது. இந்த நரம்பிற்கு இடைத்தர நரம்பு என்று பெயராம்!

இந்த இடைத்தர நரம்பு இருக்கின்றதல்லவா? அது ஒழுங்காக செயற்பட்டால் தான் எம்மால் இயற்கையாக சீராக மூச்சு விட முடியும். சுவாசப்பைகளுக்கு அடியில் உள்ள இந்தத் தட்டைப் பாதிக்கக்கூடிய வகையில் அதிகமாகச் சாப்பிட்டு விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அல்லது அஜீரணத்தினால் வயிற்றுக் கோளாறு வந்து விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது மூளையில் மூச்சு விடும் பாகங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய உறுப்புக்கள் பாதிக்கப்படுமாம். இந்த இடைத்தர நரம்பு சரியாக வேலை செய்யாது.

இடைத்தர நரம்பு சரியாக வேலை செய்யாவிட்டால் என்ன ஆகும்? உடனே விக்கல் வரும்! தைபாய்ட் காய்ச்சல் வந்தவர்களுக்கும், அதிகமாகப் பயப்படுபவர்களுக்கும், அதிகமாகத் துன்பப்படுவர்களுக்கும், மன உளைச்சல் இருப்பவர்களுக்கும் விக்கல் அடிக்கடி ஏற்படும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

விக்கல் ஏற்பட்டால் அதனை எப்படியெல்லாம் கட்டுப்படுத்தலாம் என்று சில முதலுதவி ஆலோசனைகளை நமக்குக் கூறுகின்றனர். விக்கல் வந்து விட்டால் அதனை நிறுத்துவதற்குத் தண்ணீர் குடிக்கவேண்டும். இரண்டு கப் தண்ணீர் குடிக்கலாம். ஆனால் இதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டியது என்னதெரியுமா? தண்ணீரை மடக்கென்று ஒரே மூச்சில் குடிக்கக்கூடாது. அப்படிக் குடித்தால் நிச்சயமாக விக்கல் நிற்காது. தண்ணீரைச் சிறிது சிறிதாக உறிஞ்சிக்குடிக்க வேண்டும். இப்படி உறிஞ்சிக் குடிக்கும்போது விக்கல் மட்டுப்படுத்தப்படும்! விக்கல் வந்தால் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் அதனை மெதுவாகக் குடிக்கவேண்டும் என்பது நாம் அறியாத விடயம்.

அடுத்ததாக விக்கல் வந்தவர்கள் தமது இரண்டு காதுகளையும் சிறிது நேரத்திற்கு தமது இரு கைகளாலும் இறுக்கி மூடிக்கொள்ளவேண்டும். இந்த முறையாலும் சிலருக்கு விக்கல் நின்று விடுமாம்.

அடுத்ததாக ஒருவருக்கு விக்கல் ஏற்பட்டு விட்டால் அவர்கள் மிகவும் ஆசைப்படும் ஒரு பொருளை நினைத்துக்கொண்டால் சிறிது நேரத்தில் இவ் விக்கல் நின்று விடுமாம். ஆசையுள்ள பொருள் என்னவென்று தீர்மானிபபதற்கே எமக்கு அதிக நேரம் செலவழிந்து விடுமே! ஆனால் அப்படி நினைத்துப் பார்த்தால் விக்கல் நிற்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

இல்லாவிட்டால் ஒரு ரூபாய் காசை எடுத்து ஐஸ் தண்ணீரில் அதனைப்போடுங்கள். பின்பு அந்தக்காசை நன்றாகத் துடைத்துக்கொள்ளுங்கள். இப்போது அது ஜில் என்று ஆகிவிடும்! இதனை விக்கல் வந்தவர்களின் கழுத்தின் பின்புறமாக வைத்து அழுத்தினால் விக்கல் நின்று விடுவதற்கு வாய்ப்புள்ளதாம்.

சிறு பிள்ளைகளுக்கு விக்கல் வந்தால் ஒரு அதட்டல் போடலாம், அல்லது அச்சப்படுத்தலாம், அல்லது ஏதாவது வேடிக்கை சொல்லி அவர்களை ஏமாற்றலாம். இவற்றின் மூலம் விக்கல் நிற்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாம். இரும்புக்கம்பியை இலேசாக சூடுகாட்டி கையால் தொடக்கூடிய சூட்டில் உடலில் பதித்தால் விக்கல் நின்று விடுமாம். சூடான தண்ணீரால் கொப்பளித்தாலும் விக்கல் நிற்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாம். சிறிது நேரம் நாக்கை வெளியில் நீட்டிக்கொண்டு நின்றாலோ அல்லது தும்மினாலோ கூட விக்கல் நின்று விடுமாம்.

இவையெல்லாம் சாதாரண முதலுதவிகள். இவைகளைச்செய்தும் விக்கல் நிற்காவிட்டால் டாக்டரிடம் தான் போக வேண்டும். அவசரமாக எதையும் விழுங்கினால் கூட விக்கல் வரும்.

சிறுவன் ஒருவன் நீண்ட நேரமாக விக்கிக்கொண்டு இருந்தான். டாக்டரிடம் கூட்டிக்கொண்டு போனார்கள். டாக்டர் சிறுவனை என்ன செய்தாய்? என்று கேட்டார். நான் ஊதுபத்தி ஸ்டான்டை விழுங்கி விட்டேன் என்றான் சிறுவன். அதனை எப்படியப்பா விழுங்கினாய்? என்று கேட்டார் டாக்டர். சிறுவன் கூறினான் ''அதுவா சார்! வாழைப்பழம் இருக்கின்றதல்லவா? அதைத்தான் விழுங்கினேன்'' என்றான். அதற்கு ஏன் ஊதுபத்தி ஸ்டான்டை விழுங்கியதாகக் கூறினாய்? என்றார் டாக்டர். ''எங்கள் வீட்டில் வாழைப்பழத்தில் தான் ஊதுபத்தியைக் குத்திவைப்பார் எனது அம்மா'' என்றான் சிறுவன்.

*இளசை எஸ்.சுந்தரம்.*

# பெருந்தோட்டப் பகுதி மக்கள் நலனில் அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் பெருந்தோட்டப்பகுதி மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை காக்கத் தவறியுள்ளது என எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.


தெல்தோட்டையில் கடந்த ஞாயிறன்று மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இப்பிரதேச மக்களின் மேம்பாடு குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, எதிர்காலத திட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தும்.

போதிய அனுபவங்கள் இல்லாதவர்கள் பெருந்தோட்டங்களில் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதால், பெருந்தோட்டத்துறைகளில் கடமை புரியும் ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இப்பிரதேசங்களில் வேலையற்ற இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கிறது. இது குறித்து அரசாங்கம் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கண்டி உட்பட மலை நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் ஒரு பிரதிநிதியே பாராளுமன்றத்தில் தற்போது அங்கம் வகிக்கிறார். இவரும் தனது அரசியல் இலாபம் கருதி வேறு மாகாணங்களுக்கான சேவைகளிலேயே ஈடுபட்டு வருகிறார்.



அண்மைக்காலங்களாக இப்பகுதிகளில் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தப்போராட்டங்களும், வீதி மறிப்புப்போராட்டங்களும் இடம் பெற்று வந்த போதிலும், அரசாங்கம் அதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவிததுள்ளார். (தி-61)

# ஜே.வி.பியுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க ஜனாதிபதி முயற்சி

## மங்களசமரவீர தலைமையில் குழு ஒன்றும் நியமிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான பேச்சுக்கள் முறிவடைந்ததைத் தொடர்ந்து ஸ்ரீ.சு.கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. ஜே.வி.பியுடன் பேச்சுக்களை மேற்கொள்ளக் காரணமாகவிருந்த மங்கள சமரவீர மண்டும்ஜே.வி.பியை பேச்சுகது அழைகககவுள்ளார்.

ஆனால், பேச்சுக்கள் உத்தியோக பூர்வமாகவா? அல்லது உத்தியோக பூர்வமற்றதாகவா? நடாத்துவது என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி மங்கள சமரவீரவையும், ஒரு குழுவினரையும் நியமித்துள்ளார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மீண்டும் ஜே.வி.பியுடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு நெருக்குதல்களைக் கொடுத்து வருகின்றனர்.

கண்டியில் ஜனாதிபதி மாளிகையில இது தொடர்பாக ஒரு விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினாகளான லக்ஷ்மன் கதிர்காமர், டி.எம்.ஜயரட்ண, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜே.வி.பியுடன் இறுதித்தீர்வு எட்டப்படாமை நாட்டின் எதிர்காலத்தைப பாதிக்கும். இதனால் விரைவில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். மக்கள் அதனை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினர்.

இதேவேளை, மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க சுதந்திரக்கட்சி தம்மை உத்தியோகபூர்வமாக இன்னும் அழைக்கவில்லை என்றும், மீண்டும் பேச்சுக்கள் தொடங்கினால் இறுதித்தீர்வு எட்டப்படும் வரை அது தொடரும் என்றும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா திஸா நாயக்க தெரிவித்துள்ளார். (த)

## இராசி பலன்

**17. 09. 2003**

**(ஆவணி ~31, புதன்)**

**சஷ்டி- மு.ப- 7.31 வரை**

**ரோகிணி - முழுவதும்**

**இராகுகாலம் - 12.03 - 1.33**

**சுபநேரம் - 4.33-6.03**

**மேடம்**
அதிக வார்த்தை, தொழில்கஷ்டம், சிந்தனை மிகுதி, செல்வாக்கு குறைவு.

**இடபம்**
நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, தெளிந்த சிந்தை.

**மிதுனம்**
பிதா சிந்தை, பணவிரயம், அமைதிக் குறைவு, காரிய தாமதம்.

**கடகம்**
தொழில் சிந்தை, போசன சுகம், எடுத்த கருமங்கள் கைகூடும், தனவரவு.

**சிங்கம்**
கடின உழைப்பு, சுப நிகழ்வு, தூர தேசச் செய்தி, மேன்மை.

**கன்னி**
புதிய திட்டமிடல், வீண்பயம், வயிற்றுக் கோளாறு, பிரயாணம்.

**துலாம்**
எதிர்பாராத அச்சம், போசன சுகம், சோம்பல், பிரயாண பயம்.

**விருச்சிகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில இலாபம், ஆரோக்கியம், பணவசதி.

**தனுசு**
சுகவாழ்வு, நல்ல பிரயாசை, புதிய விடயம், காரிய சித்தி.

**மகரம்**
வியாபார விருத்தி, பிரயாண இடையூறு, எண்ணங்கள் தாமதமாகும், கௌரவக் குறைவு.

**கும்பம்**
கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், திடீர் பயணம், அற்பர் நேசம்.

**மீனம்**
இனிய அனுபவம், முயற்சி கைகூடும், பணவருவாய், பிறர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் முதலாவது சங்கமம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் முதல் சங்கம நிகழ்வு சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிறன்று கோட்டச் செயலாளர் எஸ். சந்திரசேகரம் தலைமையில் இடம் பெற்றது.

பொதுச்சுடரினை தென்மராட்சி பிரதேச செயலர் சிறிநிவாசன் மற்றும் மாவீரர் மலரவனின் சகோதரர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக்கொடியினை தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைத்தார்.

அகவணக்கத்தைத்தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளருமான இளம்பிறை, தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் க. கனகலிங்கம், பிரதேச செயலர்சிறிநிவாசன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் உரையாற்றினர்.

கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய பிரதேசங்களின் தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட பிரச்சினைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டது.

மறவன்புலோ, தனங்கிளப்புப் பகுதிகளில் 1000ஏக்கரில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய வகையில் அப்பகுதிகளிலிருந்து படையினர் விலக உறுதியளித்திருந்தனர். ஆனால் இதுவரை படை விலகலுக்கான ஆயத்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாதது ஏன்? என பேரவை உறுப்பினர்கள் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் கேள்வி எழுப்பினர்.

இது விடயம் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் படை அதிகாரிகள் பங்குபற்றி உறுதியளித்த போதும் இதுவரை எதுவும் நடக்கவில்லை என பிரதேச செயலர் தெரிவித்தார். (த-5)

## வர்த்தகர்களிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின 16வது ஆண்டு நினைவு நாளையொட்டி எதிர்வரும் 26ஆம் திகதி வரை சகல வர்த்தக நிறுவனங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டி தினமும் தியாகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துமாறு சகல வர்த்தக நிறுவன உரிமையாளர்களையும் யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (த-5)

# இஸ்ரேலுக்கான நிதியுதவிகளை நிறுத்திவிட அமெரிக்கா முடிவு

## பலஸ்தீனப் பகுதிகளில் குடியேற்றங்கள் தொடர்வதற்கு எதிர்ப்பு

(வாஷிங்டன்)

**இஸ்ரேலுக்கான சில நிதியுதவிகளை நிறுத்திவிட அமெரிக்கா முடிவு செய்துள்ளது.**

**பலஸதீனப் பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் குடியேற்றங்களை ஆட்சேபித்தே இந்த முடிவை அமெரிக்கா எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

இதேசமயம் சமீப காலமாக மத்திய கிழக்கின் அமைதிக்கென அமெரிக்கா முன்வைத்துள்ள ''றோட் மாப்'' திட்டம் முறையாக செயல்படுவதற்கு இஸ்ரேலின் சில நடவடிக்கைகள் குந்தகமாக அமைந்திருப்பதும் காரணமாக இருக்கலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

இஸ்ரேலின் இணக்கமற்ற போக்கின் காரணமாகவே பலஸ்தீன முன்னாள் பிரதமர் முகமட் அப்பாஸ் பதிவி விலக நேர்ந்தது என்றும் கருதப்படுகின்றது.

மேலும், இஸ்ரேல் காஸாப் பகுதியில் அமைத்துவரும் தடுப்பு வேலி நடவடிக்கைகளையும் அமெரிக்கா விரும்பவில்லை.

இஸ்ரேலின் மேலதிக பாதுகாப்பு வேலி அமைக்கும் திட்டத்தை குற்றச் செயலாகத் தீர்மானிப்பதா, இல்லையா என்பது குறித்து இதுவரை அமெரிக்கா தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று வெள்ளை மாளிகை தகவல்கள் கூறுகின்றன.

இஸ்ரேலுக்கு வழங்கப்படவிருந்த 900 கோடி அமெரிக்க டொலர் கடனுதவி இடைநிறுத்தப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பலஸ்தீன அதிபரை தீர்த்துக்கட்டும் நோக்கிலிருக்கும் இஸ்ரேலுக்கு, அமெரிக்காவின் இந்த முடிவு பலத்த நெருக்குதல்களைக் கொடுக்கும் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (பி-2)



எகிப்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐந்து நுழைவாயில்களில் ஒன்றான பாப் ஸுவேலியா என்ற நுழைவாயில் தற்போது பொதுமக்களின் பார்வைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது. சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த நுழைவாயிலை பராமரிக்க அமெரிக்க ஆய்வகம் உதவ முன்வந்துள்ளது.

## தமிழிற்கு செம்மொழி அந்தஸ்து

(சென்னை)

தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்குவது பற்றி இந்திய மத்திய அரசு ஆலோசித்து வருகின்றது.

அண்மையில் சென்னைக்கு வந்திருந்த மத்திய அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

தமிழ்மொழியுடன் 7 மொழிகளை செம்மொழியாக அறிவிப்பது பற்றி இந்திய மத்திய அரசு ஆலோசித்து வருவதாக மேற்குறிப்பிட்ட அதிகாரி கூறியுள்ளார். (பி-2)

உலக தரிசனம்

# சவூதிச் சிறைச்சாலையில் தீ விபத்து

# 67 சிறைக்கைதிகள் கருகி மாண்டனர்

## 20 சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் காயம்

(ரியாத்)

சவூதி அரேபியாவில் உள்ள மிகப்பெரிய சிறைச்சாலையான அல்-ஹீர் சிறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 67 சிறைக் கைதிகள் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட இத் தீயினை அணைக்க தீயணைப்புப் படையினர் 3 மணிநேரம் போராடி அணைத்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சமபவம் நிகழ்ந்த சமயம் சிறைச்சாலை விடுதியில் தங்கியிருந்த 3 பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 20 உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.

சவூதித் தலைநகர் ரியாத்திற்கு அண்மையில் உள்ள இந்தச் சிறைச்சாலையில் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 200 இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இத்தீவிபத்திற்கான காரணம் சதி நாசகார வேலையா என்பது குறித்து திட்டவட்டமாகக் கூறமுடியாது என்றும், விசாரணைகளைத் தீவிரப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். (பி-2)

## போர்த்துக்கலில் காட்டுத்தீ: அணைக்கும் பணி தொடர்கிறது

(லிஸ்பன்)

போர்த்துக்கலின் தலைநகர் லிஸ்பன்னிற்கு அண்மித்துள்ள வனப்பகுதியில் கடுமையான காட்டுத்தீ பரவியுள்ளது.

இக்காட்டுத்தீயை அணைக்கும் நடவடிக்கையில் 1000 ற்கும் மேற்பட்ட தீயணைக்கும் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

காட்டுத்தீயினால் ஏற்பட்டுள்ள புகை மண்டலம் தலைநகர் லிஸ்பன்னிற்குப் பரவியுள்ளது.

போர்த்துக்கலில் இவ்வாறான காட்டுத்தீ பரவும் சம்பவங்கள் பல தடவை ஏற்பட்டுள்ளது.

இம்முறை தலைநகருக்கு அண்மையில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## மெக்ஸிக்கோவில் தோல்வி கண்ட

# உலக வர்த்தக மாநாட்டை மீண்டும் நடத்த முடிவு

(கன்கூன்)

மெக்ஸிக்கோவின் கன்கூன் நகரில் நடைபெற்ற உலக வர்த்தக அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு தோல்வியில் முடிவடைந்ததையடுத்து மீண்டும் அடுத்த மாநாட்டை வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்குள் நடதத உலக வர்த்தக அமைப்பு தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற மாநாட்டில் 146 நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றனர். எனினும், இந்த மாநாட்டில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படாமல் தோல்வியில் முடிவடைந்தது. இதனையடுத்தே இந்த 146 நாடுகளின் அமைச்சர்களும் இணைநது அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில் வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்குள் பொதுக குழுவைக் கூட்டி அதில் மூத்த அதிகாரிகள் நிலையில் உள்ளோரை பங்கேற்க நடவடிக்கை எடுக்கும் படி பொதுக்குழுவின் தலைவரைக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வரும் டிசெம்பர் 15ஆம் திகதிக்குள் மீண்டும் இம்மாநாட்டைக் கூட்டுவதற்கு உலக வர்த்தக அமைப்பு தீர்மானித்துள்ளது. (பி-2)

# அவுஸ்திரேலிய மதகுரு கொலை

# 13 எதிரிகளும் குற்றவாளிகள்

(புதுடில்லி)

ஒரிஸா மாநிலத்தில் ஆஸ்திரேலிய பாதிரியார் கிரகாம் ஸ்டெயின்ஸ் அவரது இரண்டு மகன்களுடன் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 14 பேரில் தாரசிங் உட்பட 13 பேர் குற்றவாளிகளே என்று புவனேசர் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனினும், இவர்களுக்கான தண்டனையை வரம் 22 ஆம் திகதி வழங்கவுள்ளதாக நீதிபதி மகேந்திர நாத் பட்நாயக் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்த கிரகாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது மகன்கள் தங்களது ஜீப்பில் தூங்கிக்கொண்டிருந்த போது, டாரசிங் தலைமையிலான 15 பேர் கொண்ட கும்பல் ஒன்று அவர்களை எரித்துக் கொலை செய்தது. இந்தச் சம்பவம் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது.

இந்த வழக்கில் தாராசிங்கின் முக்கிய ஆதரவாளர்கள் 2 பேர் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டதை அடுத்து ஒரிஸா மாநிலம் புவனேஸ்வர் நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்று வந்தது.

பரபரப்பான தீர்ப்பை அறிந்து கொள்வதற்காக ஏராளமான மக்கள் நீதிமன்றின் முன் கூடியிருந்தனர். பலத்த பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருந்து.

இந்த வழக்கில் தனத கணவரைக் கொலை செய்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கிவிட்டதமாக கிரகாம் ஸ்டெயின்ஸின் மனைவி மாஸ்ரிக் கூறியிருந்தார்.

மயூர்பஞ்ச் மாவட்டத்தின் தொழு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் பணியில் கிராகாமும் அவரது மகன்களும் ஈடுபட்டிருந்தனர். அவர் விட்டுச் சென்ற பணியை தொடரப் போவதாக கிளாஸ்ரிக் கூறியுள்ளதுடன் அதனை மேற்கொண்டும் வருகின்றார். (பி-2)

# சுபாஷிணியாக இருந்தவர் சுபாஷ் சந்திரபோஸ் ஆனார்

## அறுவைச் சிகிச்சை தந்த மாற்றம்

(வேலூர்)

ஆண், பெண் உறுப்புகளோடு பிறந்து 8 ஆண்டுகள் தவித்து வந்த இளந்தளிருக்கு வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் திங்கட்கிழமை வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.


இந்த அறுவைச் சிகிச்சை மூலம் ஆண் என்ற அந்தஸ்தை அக்குழந்தை பெற்றுள்ளது. பெண் குழந்தையாய்ப் பாவித்து சுபாஷிணி என பெயரிட்டு இதுவரை வளர்த்து வந்த பெற்றோர், புதுவாழ்வு பெற்ற அந்த இளந்தளிருக்கு சுபாஷ் சந்திரபோஸ் எனப் பெயரிட்டுள்ளனர்.

அரக்கோணத்தை அடுத்த ஐயப்பேடு கிராம காலனியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி நரசிம்மனுக்கும் உமாவுக்கும் 8 ஆண்டுகளுக்கு முன் ஆண், பெண் உறுப்புகளுடன் குழந்தை பிறந்தது.

இதைப் பெரிதுபடுத்தாமல் பெற்றோர் அக்குழந்தைக்கு சுபாஷிணி எனப் பெயரிட்டு வளர்த்தனர். அப்பகுதியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் இக்குழந்தை 3-ம் வகுப்பு படித்து வந்தது.

தன் உடலில் உள்ள குறைபாடு இன்னது என்பதை அறியாத இக்குழந்தை வெளியில் சொல்லத் தொடங்கியது. விளைவு சக மாணவ, மாணவியர் ஆம்பளச்சி என பட்டப் பெயரிட்டு அழைக்கும் நிலைக்கு ஆளானது.

மாணவர்களின் கேலிப் பேச்சைப் பொறுக்க இயலாத இக்குழந்தை கிணற்றில் விழுவதற்கு முயன்றபோது சிலர் அதைக் காப்பாற்றி வீட்டில் ஒப்படைத்தனர். பள்ளிக்கு அக் குழந்தை போக மறுத்தது. இதன் காரணமாக உதவும் உள்ளங்கள் என்ற அமைப்பின் உதவியுடன் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. (பி-2)



தென்கொரியாவின் பூசான் நகர் சூறாவளிக்காற்றினாலும், பலதத மழையினாலும் பெரிதும் பாதிக்கப்படடுள்ளது. இந்த புயல், மழையினால் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். வீடுகளும், வாகனங்களும் சேதமடைந்தன. ஹோட்டலாக இயங்கி வந்த கப்பல் ஒன்று சூறாவளிக்காற்றினால் சேதமடைந்திருப்பதை படததில் காணலாம்.

## ரஷ்யாவில் குண்டு வெடித்து 4 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் பாதுகாப்புச் சேவை மண்டலத்தின் தலைமையகத்தின் வெளியே குண்டொன்று வெடித்ததில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் செச்சினிய எல்லைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இத்தலைமையகத்தில் 100இற்கும் மேற்பட்டோர் சம்பவதினம் பணியில் ஈடுபட்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இக்குண்டு வெடிப்புக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், செச்சினியத் தீவிரவாதிகளே இதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (பி-2)

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு
-குறள்

வலம்புரி

## மண்டும் முருங்கை மரத்தில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும்,ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டுச் சேரும் முயற்சிகள் தோல்வி கண்டமை நாட்டுக்கு நன்மை பயக்கும் என எதிர்பார்த்த வேளையில் மீண்டும் கூட்டுச்சேரும் முயற்சிகள் முளை விடுவதான செய்தி சமாதான விரும்பிகளுக்குப் பேர் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வை அதிகாரப் பரவலாக்கல் மூலமே ஏற்படுத்த முடியும் என்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கொள்கைக்கு இணங்கிக் கொள்ள முடியாத நிலையிலேயே ஜே.வி.பி.உடனான கூட்டு முயற்சி குலைந்து போனது.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை தமிழர்களுக்கு இந்நாடு சொந்தமில்லை.இங்கு இனப்பிரச்சினை இல்லை-இது பௌத்த சிங்கள தேசம் என்ற இனவாதக் கொள்கையை உடையது.ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நிலைப்பாடு அதுவன்று.

அரசு முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளை அவர் விமர்சித்து வருகின் றார் ஆயினும், இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு காணமுடியும் என்ற கொள்கையில் அவர் நிதானமாக நடந்து கொள்கிறார்.

இத்தகைய முரண்பட்ட கொள்கை காரணமாகவே கூட்டுக் குலைந்து போனது. இதற்கு மேலாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கணவர் விஜயகுமாரதுங்காவைக் கொலை செய்தவர்கள் ஜே.வி.பியினர் என்ற குற்றச்சாட்டும் இருக்கவே செய்கிறது.இக்குற்றச்சாட்டின் அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருவதை ஜனாதிபதியின் பிள்ளைகள் விரும்பவில்லை என்ற தகவலும் உண்டு.

இத்தகைய காரணங்களினால்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி கூட்டுச் சாத்தியமற்றுப் போனது. ஆனால் இக்கட்சிக் கூட்டை எப்பாடுபட்டும் ஏற்படுத்த வேண்டு மென்பதில் ஜனாதிபதியின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்கா விடாப்பிடியாகவுள்ளார்.அவரின் விடாப்பிடி ஒரு பிரமச்சாரி நூறு குரங்குக்குச் சமன் என்ற அடிப்படையில் மிக இறுக்கமாகவேயுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டுமாயின்... இல்லை இல்லை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொ.ஐ.முன்னணி ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டுமாயின் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதே ஒரே வழியென்பது அனுரா பண்டார நாயக்காவின் சித்தாந்தம். அனுராவின் விடாப்பிடிக்கு ஸ்ரீ.சு.கட்சியிலுள்ள இனவாதப் பிரியர்களும் அவ்வப்போது உருக்கொடுத்து வருகிறார்கள் இதனால் மீண்டும் முருங்கை ஏறுவதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

# திருகோணமலை விவகாரத்தில் முப்படைத்தளபதி என்ற வகையில் கடுமையான முடிவுகளை எடுக்க நேரிடும்

### ஜனாதிபதி பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையில், தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் முகாம்களை அமைத்து, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத் தளம் ஆகிய பிரதேசங்களை அண்மித்த பகுதிகளில் தமது ஆயுத பலத்தைப்பெருக்கி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் இச் செயல்களுக்கு அரசு நடவடிககை எதனையும் எடுக்காது மௌனமாக இருந்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடந்த 12ஆம் திகதி அவா அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், சமாதான முயற்சிகள் என்ற போர்வையில் திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தைத தாக்கி, இதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கே தமிழீழ விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டி வருகின்றனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், இத்துறைமுகத்தைச் சுற்றி, தமிழீழ விடுதலைப்புலிகள் 12புதிய முகாம்களை அமைத்துள்ளனர். இவற்றின் ஊடாகவே துறைமுகம் மீது தாக்குதல் நடத்தக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் இப்பிரதேசத்தின் பாதுகாப்புத் தொடர்பாக நான் தீர்க்கமான முடிவினை எடுக்கவுள்ளேன்.

தமிழீழ விடுதலைப்புலிகளை ஐக்கிய தேசியமுன்னணி அரசு சட்ட பூர்வமான இராணுவமாக அங்கீகரித்துள்ளது.

தேசத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள புலிகளின் நடவடிக்கைகளை அரசு தடுத்துநிறுத்த வேண்டும். இல்லையேல் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் என்ற வகையில் கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டிவரும் என ஜனாதிபதி அக்கடிதத்தில் எச்சரித்துள்ளார். (தி-05)

# விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை வழங்க வேண்டும்

### மாகல கடவள புண்ணிய சாரதேரர்தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படவேண்டும் என நீதிக்கும், சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் ஏற்பாட்டாளர் மாகல கடவள புண்ணியசார தேரர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற இலங்கையின் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் 13ஆவது மாநாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத்தெரிவித்தார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர் வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை அடையாளம்கண்டு அவர்களுக்கென தனியானதொரு நிர்வாக அலகு வழங்கப்படவேண்டும்.

சகல இனங்களையும், மதங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந் நிகழ்வில் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

17 மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் மதத் தலைவர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் முதன்முறையாக யாழ்.மாவட்டத்தில் இருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (தி-61)

# டோக்கியோ நிதியுதவிகள் கிடைக்கத் தொடங்கியுள்ளன

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஜூன்மாதம் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதி உதவிகள் தற்போது கிடைக்கத்தொடங்கி இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இதனடிப்படையில், இவ்வாண்டின் அபிவிருத்திப் பணிகளுக்கென டோக்கியோ நிதியுதவியிலிருந்து 10ஆயிரம் கோடி ரூபா கிடைத்துள்ளது. இந்நிதி பலவேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பாதைகளையும், பாலங்களையும் புனரமைப்பதற்காக 370 கோடி ரூபா செலவிடப்பட்டது.

ஆனால், இந்நிதியுதவி மூலம் இவ்வாண்டு இப் புனரமைப்புப் பணிகளுக்காக ஆயிரத்து 850கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோலவே, கடந்த ஆண்டில் குடிநீர்த்திட்டங்களுக்காக 400 கோடி டொலர் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும். இவ்வாண்டு இதற்கு 1800 கோடி ரூபாவை அதிகரிக்க முடியும்.

மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து, நிவாரணம் வழங்கும் துரித திட்டங்கள் இம் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி ஆராயும் பொருளாதாரக் குழு நேற்று பிரதமர் தலைமையில் கூடியது. இதில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நிதியமைச்சர் கே.என். சொக்ஸி அடுத்த வரவு செலவுத் திட்டத்தில், எதிர்வரும் 3ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அங்கு விரிவாக விளக்கினார். (தி-06)

# அடிக்கல் நாட்டல்

(மருதங்கேணி)

கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மலையாள புரத்தில் கிராம அபிவிருத்திச்சங்கம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு கடந்தவாரம் நடைபெற்றது.

இக் கட்டடத்திற்கான அடிக்கல்லை கரச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தனும் ஊரக வளர்ச்சிக் குழுவைச்சேர்ந்த அன்பு மாறன் ஆகியோர் நாட்டி வைத்தனர். (உ-35)

# வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம்களுக்கு புலிகள் அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பிரதேசங்களில் முஸ்லிம் வர்த்தகர்கள் மீணடும் நாளைமுதல் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிவழங்கி உள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக புலிகளின் கரடியநாறு தேனகம் விடுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற மாநாடு ஒன்றிலேயே இந்த அனுமதி புலிகளினால் வழங்கப்பட்டது.

இச் சந்திப்பில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் முஸ்லிம் வர்த்தகர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த விதமான தடைகளும் இன்றி சுதந்திரமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என உறுதியளித்துள்ளார். (வ)

## திணசரி தியானம்

### தியானம் பெறுதல்

ஆழ்ந்த தியானம் என்பது ஒரு நாளில் ஒருவாரத்தில், அல்லது ஒரு மாதத்தில் வந்து விடாது. நீண்டகாலம் கஸ்டப்பட வேண்டும். பொறுமையாயிருங்கள். சகிப்புத் தன்மையுடன் இருங்கள். விழிப்பாயிருங்கள். பற்றற்ற தன்மையையும் இறைவனை உணர்வதற்கான தீவிரமான அவாவையும் வேட்கையையும் மேற்கொள்ளுங்கள். நாளடைவில் நீங்கள் ஆழ்ந்த தியானத்தையும் சமாதி நிலையையும் மேற்கொள்ளக் கடமைப்பட்டவராகி விடுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# ஓமந்தைச் சாவடியில் இளைஞர்கள் இருவர் கைது

(வவுனியா)

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக சந்தேகத்திற்கு இடமான பொருட்களைக் கொண்டு வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வன்னிப் பகுதியில் இருந்து ஓமந்தை ஊடாக வவுனியாவுக்கு வரும்போது கடந்த ஞாயிறன்று காலை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் வைத்திருந்ததாகவும் அதனுள் சந்தேகத்திற்கு இடமான பொருள் இருந்ததையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடு அல்லாத பகுதியில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்வதற்காக வந்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.(ந-05)

# 2004ல் யாழ் குடாநாடு முழுவதற்கும் தொலைபேசி சேவை வழங்கப்படும்

## ரெலிகொம் அதிகாரி அமைச்சர் மகேஸ்வரனிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்தியத்திற்கு இன்னும் பல்லாயிரக் கணக்கான தொலைபேசி இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ்.அன்னான் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய தொலைபேசி சேவையை விஸ்தரிப்பது தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று தனது அமைச்சில் வைத்து ரெலிகொம் நிறைவேற்று அதிகாரி அன்னானுடனும் ஏனைய உயர்மட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடிய போதே அன்னான் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் 150 மீற்றர் உயரமான தொலைபேசிக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. 2004இல் மேலதிகமாக தொலை பேசித் தொடர்புகளை வழங்கும் வகையில் புதிய இலத்திரனியல் சாதனங்களைக் கொண்ட தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று யாழ்ப் பாணத்தில் நிறுவப்படவுள்ளது. இதன் பின்பு முழுக் குடாநாட்டிற்கும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்க இருப்பதாகவும் தெரிவித்ததுடன் இப் பிரதேசங்களில் தொலைபேசி இணைப்புக்களிற்கு மக்களிடமிருந்து வரும் கோரிக்கைகள்யாவற்றையும் பூர்த்தி செய்ய இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை காரைநகர், வட்டுக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் புதிய தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றை அமைக்கவும் இணக்கம் காணப்பட்டது. இப் பிரதேசத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பதற்கான காணியை அமைச்சர் மகேஸ்வரன் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணப் பகுதியில் தொலைபேசி இணைப்புக்களின் தேவைகளைக் கண்டறிய ஒக்டோபர் 18ம் திகதி தொடக்கம் நடமாடும் சேவையை ஆரம்பித்து விண்ணப்பதாரிகளைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் இக் கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் யாழ் மாவட்டத்தில் நடைபெறவுள்ள அபிவிருத்திகள் பற்றிய கலந்துரையாடலின் போது ஓர் விளக்க முன்வைப்பு வழங்கப்படும் எனவும் பிரதம நிறைவேற்று அதிகாரி அமைச்சரிடம் தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலின் போது இந்து சமய விவகார அமைச்சரின் ஆலோசகர்களான இ.பேரின்பநாயகம், இ.அன்னலிங்கம ஆகியோரும் ரெலிகொம் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ந-5)

# மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு நேற்று முதல் ஆரம்பம்

(முகமாலை)

யாழ். மாவட்டத்திற்கான மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு வைபவம் நேற்று முகமாலையில் விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முகமாலை சோதனைச் சாவடியில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் விசேடமாக அமைக்கப் பட்டிருந்த சிறப்புச் செயலகத்தில் வைத்து கடன் மீளளிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு மீட்பு நிதிக்கடன் வழங்கப்பட்டது.

இன்று மானிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, காரைநகர், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளோருக்கும், நாளை வியாழக் கிழமை கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளோருக்கும் மீட்பு நிதிக்கடன் மீளளிக்கப்படவுள்ளது. (ம)

### குரங்குபாஞ்சான்...

குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட போது கண்காணிப்புக்குழுவினர் முகாமைச் சென்று பார்ப்பதற்கு அனுமதி அளிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

குரங்குபாஞ்சான் முகாமை பார்வையிடுவதற்கு புலிகள் அனுமதி அளித்திருப்பதானது எமது சந்திப்பில் முன்னேற்றகரமானதொரு சம்பவம்ஆகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க எதிர்க் கட்சியினரின் பலத்த கண்டனத்துக்கு ஆளாகியுள்ள குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம், தொடர்பாக விடு

தலைப் புலிகளுடன் பல சந்திப்புக்களை கண்காணிப்புக்குழு ஏற்படுத்தியபோதிலும் நேற்றைய சந்திப்பில் முகாம் அகற்றப்படமாட்டா தெனப் புலிகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது. (ம)

### இடம்பெயர்ந்த...

மக்களின் பிரச்சினைகள் தொடர்பான மிக முக்கியமான கலந்துரையாடலில்;

வலி.வடக்கு மக்களை மீளக் குடியமர்த்தக் கோரி கடந்த காலங்களில் பல்வேறு வெகுஜனப் போராட்டங்களை நடாத்திய போதிலும் அதனால் இற்றைவரை எந்தவொரு பயனும் ஏற்படவில்லை.

இந் நிலையில், சர்வதேசத்தின் கண்களை வலி.வடக்கின்பால் ஈர்க்கும் வகையில், எதிர்வரும் 26-ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவதற்கு முன்னர், வலிகாமம் வடக்கு மக்களை மீளக் குடியமர்த்தக் கோரி ஒரு இலட்சம் கையொப்பங்களைத் திரட்டி

### பேச்சுக்கள்...

இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படாமையினால் மக்கள் விரக்தியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

இதன் காரணமாகவே எமது தலைமைப் பீடம் சமாதானப் பேச்சுவார்த்தையை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒரு நம்பிக்கையான புதிய சூழலில் எம்முடைய மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் எமது தலைமைப் பீடம் உறுதியாக உள்ளது என்றும் தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# யாழ்.குடாநாட்டில் எயிட்ஸ் நோய்த் தடுப்பை தீவிரப்படுத்த உத்தரவு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் எயிட்ஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு யாழ்.மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் பத்துப் பேருக்கு எயிட்ஸ் நோய் தொற்றியுள்ளதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் அவர்களுடன் இருக்கும் அகதிகளில் பலர் கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கு திரும்புகின்ற நிலை ஏற்பட்டுள்ளதால் தடுப்பு நடவடிக்கைகளைத தீவிரமாக மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்திற்கு அடுத்தபடியாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அதிக எயிட்ஸ் நோயாளிகள் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.யாழ்.மாவட்டத்தில் ஆறு பேரும் மட்டக்களப்பில் நான்கு பேரும், திருகோணமலையில் இரண்டு பேரும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-5)

## இளம் பெண்ணிடம் பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரை ஆட்டோவில் வந்த இனந் தெரியாத மூவர் ஏமாற்றி மூவாயிரம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் றக்கா வீதியில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு 25 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த உதயகுமார் சுபாசினி (வயது-16) என்ற பெண்ணிடமே பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. (ந-7)

### நோர்வே...

இலங்கை விஜயம் அமையவுள்ளதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திப்பதற்கு முன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, புளொட் தலைவர்களையும், கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் நோர்வேத் தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம)

### இடைக்கால...

விக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், அரசின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் இடைக்கால நிர்வாக சபை என்பவற்றை எதிர்த்து ஜே.வி.பியினர் எதிர்வரும் 25 ஆம்

## சங்கக் கூட்டம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தின் விஷேட பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இல. 284, கந்தர்மடம் எனும் முகவரியிலுள்ள யாழ். வைத்தியசாலைக் கட்டடத்தில் சங்கத் தலைவர் வே. தவச்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (43)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு வெளியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு முகவர்களாகச் செயற்படும் வாணிபர்களுக்கான கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பளையில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலுக்கு அனைத்து முகவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ந-5)

● ● ●

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலுக்கு அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் யோ.கேமநளினி கேட்டுள்ளார். (ந-5)

## வட்டு.இளைஞன் பலி

(வட்டுக்கோட்டை)

தெஹிவளையில் இருந்து பம்பலப்பிட்டிக்கு ரயிலில் பயணம் செய்த வட்டுக்கோட்டை இளைஞர் ஒருவர் தவறி விழுந்து பலியாகியுள்ளார்.

பவம்ஆகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க எதிர்க் கட்சியினரின் பலத்த கண்டனத்துக்கு ஆளாகியுள்ள குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம், தொடர்பாக விடு

களில் பல்வேறு வெகுஜனப் போராட்டங்களை நடாத்திய போதிலும் அதனால் இற்றைவரை எந்தவொரு பயனும் ஏற்படவில்லை.

இந் நிலையில், சர்வதேசத்தின் கண்களை வலி.வடக்கின்பால் ஈர்க்கும் வகையில், எதிர்வரும் 26-ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவதற்கு முன்னர், வலிகாமம் வடக்கு மக்களை மீளக் குடியமர்த்தக் கோரி ஒரு இலட்சம் கையொப்பங்களைத் திரட்டி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனானுக்கு அனுப்புவதென வலிவடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளால் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மக்களை மீளக்குடியமர்த்தக்கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வது பற்றியும் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடாத்துவதெனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி கையெழுத்துக்களைத் திரட்டும் முதற் கட்டடப பணி இன்று தெல்லிப் பழைப் பிரதேச செயலர் பிரிவிலே ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, வலி வடக்கைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமரும் அனுமதியை உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம்காட்டி படைத் தரப்பு மறுத்து வருவது தெரிந்ததே. (உ)


உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஸ்ரீ பார்வதி அம்பாள் சமேத பரமேஸ்வரன் ஆலய

சிவாசாரியர் நியமனம்

மேற்படி சிவாலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள் புரிவதற்கு தகுதியும் அனுபவமும் வாய்ந்த சிவாசாரியர் ஒருவர் உடன் தேவைப்படுகின்றார். இந் நியமனத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரங்கள் அடங்கிய தமது விண்ணப்பத்தினை ஆலய பரிபாலன சபைச் செயலாளரிடம் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறையில்) ஒப்படைக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 25.10.2003**

**கலாநிதி மா.வேதநாதன்,**
**செயலாளர்,**
**ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.** (7606)


## இடைக்கால...

விக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், அரசின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் இடைக்கால நிர்வாக சபை என்பவற்றை எதிர்த்து ஜே.வி.பியினர் எதிர்வரும் 25 ஆம் திகதி கண்டியில் இருந்து இரண்டாவது தடவையாக பாத யாத்திரையொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

இவைதவிர, வேலையில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு உயர்வு, தொழிலாளர்களின் உரிமை பறிப்பு ஆகியவற்றை முன் வைத்து அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டங்களை நடத்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இப் போராட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கண்டி நகரில் நடத்தப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (உ-10)

## பயிற்றுவிப்பாளர்...

விடயத்தில் திடமான ஓர் அரசியல் சூழ்நிலை உருவாகும் வரை விளையாட்டுப் பயிற்சிகளை வழங்குவது சாத்தியமற்றது எனத் தெரிவித்து நேற்றைய தினம் தென்பகுதிக்கு திரும்பியது.

இதேவேளை இக்குழுவை உடனடியாக வெளியேறக் கோரி யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

யோ.கேமநளினி கேட்டுள்ளார். (ந-5)

## வட்டு.இளைஞன் பலி

(வட்டுக்கோட்டை)

தெஹிவளையில் இருந்து பம்பலப்பிட்டிக்கு ரயிலில் பயணம் செய்த வட்டுக்கோட்டை இளைஞர் ஒருவர் தவறி விழுந்து பலியாகியுள்ளார்.

கடந்த ஞாயிறு இடம் பெற்ற இச் சம்பவத்தில் வட்டுக்கோட்டை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த ஸ்கந்தராஜா சயந்தன் (வயது24) என்ற இளைஞரே பலியானவராவார். (ந-89)

## வவுனியாவில் எலும்புக்கூடு

வவுனியா பண்டாரக்குளத்திலிருந்து மனித எலும்புக் கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தற்பொழுது குளம் வற்றிய நிலையில் உள்ளதால் இவ் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது.

இவ் எலும்புக் கூட்டுடன் ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன. (ந-13)


**உடன் தேவை**

கொமினிக்கேசனில் பணியாற்றுவதற்குப் பெண்கள் தேவை

தொடர்பு:-
27, சப்பல் ஸ்றீற்
யாழ்ப்பாணம்
தொ.பே :- 222-5469
IC/6637



YOGI

**BEAUTY PARLOUR**
**(Academy of Beauty Culture & Hair Dressing)**
**HOME SCIENCE ACADEMY**

**குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புகள்**
**22.09.2003 முதல் ஆரம்பமாக உள்ளன.**

(1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும்( Beauty Culture and Therapy)
(2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்
(3) இலகு வழித்தையல், கேக் ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரமும் மாச்சீனி மலர் அலங்காரமும்(Fondanl Structures and Sugar Flowers) கிறிஸ்டல் அழகு பொருள்கள் தயாரித்தல்.
துணியில் வர்ண அலங்கரிப்பு,
செயற்கை மலர் அலங்காரங்கள் (Flower Making and Bouquet Making)

**இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.**
**சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.**

**75, அம்மன் றோட், நல்லூர்,யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) T.Phone: 222 2796** (7472)



**புத்தகம் கட்டுநர் தேவை**

பரில் புத்தகங்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றை கட்டுவதில் (பையிண்டிங்) அனுபவமுள்ள பெண்கள் தேவை. சுய விபரத்துடன் 19.09.2003 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு

**வலம்புரி**
இல.15 வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வரக் கல்லூரி அருகாமை)

என்னும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.